பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 22 திங்கட்கிழமை (05.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 189

# தமிழர் தாயகத்தின் நெருக்கடி நிலைமை ஒஸ்லோ சந்திப்பு மூலம் சுமுகமாகாது

## நோர்வே புறப்பட முன்னர் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்5

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பில் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள சந்திப்பு தமிழர் தாயகத்தில் இன்று ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலையை சுமுகமாக்குமென்று நாங்கள் நம்பவில்லை.

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் வியாழன், வெள்ளிக் கிழமைகளில் ஒஸ்லோவில் நடைபெறும் பேச்சுகளில் கலந்து கொள்ளும் விடுதலைப் புலிகளின் குழு நேற்றுப் புறப்பட்டது.

ஒஸ்லோ புறப்படுமுன்னர் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் 'புலிகளின் குரல்' வானொலிக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் புலிகளின் சமாதான செயலகப்பணிப்பாளர் எஸ்.புலித்தேவன், காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் உட்பட்ட குழுவினர் கிளிநொச்சியிலிருந்து இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டரில் கொழும்பு வந்து நேற்றுப்பிற்பகல் கட்டுநாயக்க விமானநிலையமூடாக ஒஸ்லோ சென்றனர். (02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலவரம் குறித்து கருணாநிதி மன்மோகனுடன் பேச்சு

சென்னை, ஜூன்5

தமிழக முதலமைச்சர் மு.கருணா நிதி புதுடில்லியில் இன்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்திக்கிறார். இச்சந்திப்பின்போது, இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமை கள் குறித்தும் அவர் பேசுவாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. சிறையிலிருந்து எட்டு கைதிகள் ஓட்டம்!

## அதிகாலையில் அதிரடியாக ஆயுதமுனையில் தப்பினர்!

மட்டக்களப்பு, ஜூன் 05

**மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கைதிகளில் எட்டுப்பேர் நேற்று ஆயுதமுனையில் சிறைக் காவலர்களை அச்சுறுத்திவிட்டுத் தப்பி ஓடியிருக்கின்றனர்.**

**இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்தச் சிறைச்சாலையிலிருந்து, - ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்திவிட்டு - நேற்று அதிகாலை வேளையில் இந்தக் கைதிகள் எண்மரும் தப்பி ஓடியிருக்கின்றமை பாதுகாப்புத் தரப்பில் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது.**

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைக் கைதிகள் காலைக்கடனைக் கழிப்பதற்காக தினமும் அதிகாலை 5.30 மணிமுதல் 6.30 மணிவரை அனுமதி வழங்கப்படுகிறது.

வழமைபோல் நேற்றைய தினமும் அதற்கெனக் கைதிகள் சிறைக் கூடங்களிலிருந்து திறந்து விடப்பட்டனர். நேற்றைய தினம் சிறைக்காவலர்கள் இருவர் கடமையில் இருந்தபோதும் அவர்கள் துப்பாக்கிகளை வைத்திருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய சிறைக்கைதிகள் எட்டுப் பேர் தங்களிடமிருந்த கைத்துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளைக் காட்டி சிறைக்

(10ஆம் பக்கம் பார்க்க)



**புதுக்குடியிருப்பில் நேற்று நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் பெருமளவானோர் பங்குபற்றி தமிழ் உணர்வை வெளிப்படுத்தினர். தற்காப்புப் பயிற்சிபெற்ற பத்தாயிரம் பேர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தாம் பெற்ற பயிற்சியினை நிறைவுசெய்தனர்.**

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையால் அமைதி முயற்சிகளில் எதிர்விளைவு!

## கண்டிப்பாக ஏற்படும் என்று பாலா எச்சரிக்கை

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது விடுத்திருக்கின்ற தடையினால் அமைதி முயற்சிகளில் நிச்சயமாக எதிர்விளைவுகள் ஏற்படும்.

- இப்படி எச்சரித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே பாலா இந்த விடயத்தைக் கூறினார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

ஐரோப்பிய ஒன்றியத் தடையால் தமிழீழ விடுதலைப் புலிகள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். எமது மக்களினது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பியத் தடை கடுமையானது - நீதியற்றது - விதிக்கப்பட்ட காலம் முறையானது

(02ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலையில் நாளை தியாகி சிவகுமாரனின் 22 ஆவது நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்5

தமிழின விடுதலைக்காய் முதல் முதலில் வீரச்சாவடைந்த தியாகி பொன்.சிவகுமாரனின் 22 ஆம் ஆண்டு நிகழ்வும் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வும் நாளை செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்க முன்றிலில் நடைபெறவுள்ளது

இதேவேளை -

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

## பெருமாள்கோயிலடி காவலரண் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஜூன்5

பெருமாள் கோயிலடிப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பெருமாள்கோயிலுக்கு முன்பாக மணிக்கூட்டு வீதியில் உள்ள இராணுவக் காவலரண் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் படையினர் தரப்பில் இருவர் காயமடைந்தனர் என்று இராணுவப்

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் சுயாட்சிக்கு அமெரிக்கா ஆதரவு! ஆனால் ஆயுதப் போராட்டம் தவறான வழியாம்

## தமிழர் தாயகத்திற்கு அமெரிக்கா தந்த முதலாவது அங்கீகாரம்!

கொழும்பு,ஜூன் 5

''விடுதலைப் புலிகளுக்கு எதிராக அமெரிக்கா தடை விதித்திருக்கின்ற போதிலும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு - சுயாட்சி முறையின்கீழ் அவர்கள் வாழும் உரிமைகளை [illegible] மதிப்பளிப்பதோடு நின்றுவிடாமல் அங்கீகாரத்தையும் வழங்குகிறது'' - என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க துணை ராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் பௌச்சர் கொழும்பில் வைத்து வலி [illegible] கூறியிருக்கிறார்

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அமெரிக்கா - வரலாற்றில் முதல் முறையாக இந்தத் தடவையே தமிழர்களின் தாயகக் கோட்பாட்டைப் பகிரங்கமாக வரவேற்றும், அங்கீகரித்தும் ரிச்சார்ட் பௌச்சர் மூலம் அமெரிக்க

(02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தியாகி சிவகுமாரன் குறித்து கருத்துக் கூற ஈ.பி.டி.பிக்கு எவ்வித அருகதையுமில்லை

## அடித்துக்கூறுகின்றது தமிழ் மாணவர் ஒன்றியம்

கொழும்பு,ஜூன்5

ஆயுதப் போராட்டமே விடுதலையைப் பெற்றுத்தரும் என்று கூறியவர் தியாகி பொன். சிவகுமாரன். இத்தகைய தியாகியைப் பற்றியோ அல்லது அவரது தியாகத்தைப் பற்றியோ கருத்துத் தெரிவிப்பதற்கு ஈ.பி.டி.பி. அமைப்புக்கு எவ்வித அருகதையும் இல்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்.

இதுதொடர்பாக மேற்படி ஒன்றியம் விடுத்த அறிக்கையில் -

தமிழ் மக்களின் விடுதலைக்காக தனது மாணவப் பருவத்திலேயே ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து முதல் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட எங்கள் முதல் மாவீரன் தியாகி பொன் சிவகுமாரன்.

அகிம்சைப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் விடுதலையைப் பெற முடியாது. ஆயுதப் போராட்டமே விடுதலையைப் பெற்றுத் தரும் என்று திடமாக நம்பி அந்த வழியிலேயே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர் தான் எங்கள் சிவகுமாரன்.

எதிரியின் கையில் உயிருடன் பிடிபடக் கூடாது என்பதற்காகவே தியாகி சிவகுமாரன் அவர்கள் தன்னை அழித்துக்கொண்டார். ஆனால், இன்று எதிரியின் அடிவருடிகளாகவும் காட்டிக்கொடுப்பவர்களாகவும் தமிழின துரோகிகளையும் எதிரியுடன் இணைந்து செயற்படும் ஈ.பி.டி.பி.யினரும் ஏனைய குழுக்களும் முடிந்தால் திருந்திக்கொள்ளுங்கள்.

அதை விடுத்து அரசியல் நடத்துகின்றோம். ஜனநாயகம் பேசுகின்றோம் என்று கூறி அரசின் அடிவருடிகளையும் தமிழின விடுதலைப் பாதையின் தடைக்கற்களாகவும் இருக்கவேண்டாம் எனக் கூறிக்கொள்கின்றோம்.

அதுவே முதல் மாவீரர் தியாகி பொன். சிவகுமாரன் போன்ற ஆயிரம் ஆயிரம் மாவீரர்களுக்கு - அவர்களின் தியாகங்களுக்கு தாங்கள் கொடுக்கும் மதிப்பாக இருக்கும் என்பதை தியாகி பொன்.சிவகுமாரன் மரணித்த இந்நாளில் தமிழ் மாணவர் சமுகமாகிய நாம் தெரிவித்துக்கொள்கின்றோம். - என்று அதில் உள்ளது.

# சண்டிலிப்பாயில் பயிற்சிப் பட்டறை

நவாலி, ஜூன்5

உலக உணவுத் திட்டத்தின் வேலைக்கான உணவு தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணிவரை பயிற்சிப் பட்டறையொன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

# ஐரோப்பிய ஒன்றியத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல - ஒரு பக்கச்சார்பானது. இணைத் தலைமை நாடுகளினது அறிக்கையானது மிகவும் சமநிலையில் இரு தரப்பையும் வன்முறைகளுக்குப் பொறுப்பாக்கி குற்றம்சாட்டியுள்ளது.

இனப்பிரச்சனையில் முதன்மைத் தரப்புகளாக உள்ள இருதரப்பு மீதும் யுத்த மீறல்கள் தொடர்பாக குற்றம்சாட்டப்படும் நிலையில் ஒருதரப்பு மீது கடும் நிலைப்பாட்டையும் மற்றொரு தரப்பு தொடர்பாக அதற்கு நேர் எதிரான போக்கையும் கடைபிடிப்பது நீதியற்றது - ஏற்புடையது அல்ல. இந்தத் தடையானது அரசாங்கத்துக்குச் சார்பானது. ஆகையால் ஒருபக்கச்சார்பானது.

ஒடுக்கப்பட்ட மக்களினது அரசியல் உரிமைப் போராட்டம் குறித்து ஒரு எதிர்மறையான தாக்கத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை உருவாக்கியிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் கருதுகின்ற னர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக கறுப்புப் பட்டியலில் இணைத்தமையுடன் இந்த செயற்பாடு முடிந்துவிடவில்லை. அதைவிட தமிழர் அரசியல் உரிமைப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதமானதாக தோற்றமளிக்கச் செய்து மாசு கற்பிக்கிறது.

இன்றைய பயங்கரவாத எதிர்ப்பு உலகில் அரச ஒடுக்குமுறைகளுக்கும் அநீதிகளுக்கும் எதிரான அனைத்து வன்முறைப் போராட்டங்களையும் அவற்றினது வரலாற்று பின்புலத்தில் நின்று பார்க்காமல் அவற்றினது அரசியலைப் பார்க்காமல் பயங்கரவாதம் எனும் ஒரே பார்வையாக உணரப்படுகிறது. இத்தகைய நிலைமையினால் எமது விடுதலைப் போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரம் பெறுவதில் சிக்கல் ஏற்படுகிறது.

தற்போதைய பயங்கரவாதத் துக்கு எதிரான உலகின் போக்கை பயன்படுத்திக் கொண்டு சிறிலங்கா அரசாங்கமானது தனது எதிரியை - அரச ஒடுக்குமுறைகளை வன்முறை மூலம் தடுக்கிற சக்திகளை எளிதில் கண்டனம் செய்கிறது - பயங்கரவாதிகளாக முத்திரை குத்துகிறது.

இந்தத் தடை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்குமான ஐரோப்பிய ஒன்றியத்தில் வாழ்கிற தமிழ் மக்களின் ஆதரவிலும் அனுதாபத்திலும் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அதற்கு மாறாக தமிழ் மக்களின் மனதை கடுமையாக பாதித்துள்ளது. தங்களது தேசப்பற்றையும் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவையும் வெளிப்படுத்தும் வகையில் உலக நாடுகள் முழுமைக்கும் அண்மையில் நடத்தப்பட்டுள்ள பாரிய பேரணிகளே சான்றாகும்.

இத்தகைய சர்வதேசத் தடைகள் மூலம் தண்டிக்கப்படுகிற இயக்கங்கள் சர்வதேசத்தின் வழிகாட்டுதல்களுக்கு உடன்பட்டுச் செல்வார்கள் என்று கருதப்படுகிறது. இது தவறான ஒரு உத்தியாகும். இத்தகைய செயற்பாடுகள் எதிர்விளைவையே உருவாக்கும்.

சர்வதேச அரசாங்கங்களால் தனிமைப் படுத்தப்படுகின்ற, இழிவுபடுத்துக்கின்ற இத்தகைய தடைகள் மூலம் சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுபடுகின்றபோது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் தனது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கும். இத்தகைய தடைகளை விதிக்கின்ற சர்வதேச சக்திகளுக்கு அழுத்தங்களைச் செலுத்துகின்ற எதுவித தார்மீக மற்றும் அரசியல் உரிமையும் கிடையாது. அவர்களது செயற்பாடு களால் அமைதி முயற்சிகளில் அவர்களது குறிப்பிடத்தக்க பங்கு குறைந்துபோகும்.

ஐரோப்பியத் தடையானது ஒரு முதிர்ச்சியற்ற நடவடிக்கை. யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்கள் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டிருந்தாலும் அமைதி முயற்சிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களின் ஈடுபாட்டை வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

அமைதிப் பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் விலகிவிடவில்லை. துணை இராணுவக் குழுவினரது வன்முறைகளை கட்டுப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் தவறியதால் ஏற்பட்ட நம்பிக்கையின்மைதான் ஜெனீவா பேச்சுக்களின் தாம தத்துக்குக் காரணம்.

இணைத் தலைமை நாடுகளின் தலையீட்டுக்கு உரிய கால அவ காசம் அளிக்காமல் ஐரோப்பிய ஒன்றியம் ஏன் இத்தடையை விதித்தது என்பது எமக்குப் புரியவில்லை.

ஐரோப்பியத் தடையானது கண் டிப்பாக அமைதி முயற்சிகளில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். தமிழீழ விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசாங்கமும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது இரு தரப்பு சமநிலை என்கிற அடிப்படையில்தான்.

இப் புரிந்துணர்வின் அடிப்படையில் இரு தரப்பினரும் பேச்சுகளை நடத்துகின்றனர். அமைதி முயற்சிகளை ஆதரிக்கின்ற - முன்னெடுக்கின்ற - சர்வதேச அரசுகள் ஒரு தரப்பை பயங்கரவாத இயக்கமாக தண்டிக்கின்ற போது இப்புரிந்துணர்வானது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்.

அமைதி முயற்சிகளின் தீர்வுக்கான முட்டுக்கட்டையாக இருக்கும். ஐரோப்பியத் தடையானது மகிந்த ராஜபக்ச அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் கடும்போக்காளர் களுக்கு ஊக்க மளிக்கும். தமிழர் இனப்பிரச்சினையில் கடும்போக்கை அவர்கள் மேற்கொள்ள உதவும். தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க இராணுவத் தீர்வை மேற்கொள்ள அவர்களை ஊக்குவிக்கும். இந்தச் சூழ்நிலையானது போருக்குரிய நிலையையே தோற்றுவிக்கும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் எதிர்காலம் கேள்விக்குறியான போதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சரியாகச் செயற்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும். இந்த நாட்டில் போரைத் தவிர்க்க ஒரே வழி யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை சொல்லிலும் செயலுமாக செயற்படுத்துவதுதான்.

அமைதி முயற்சிகளிலும் பேச்சுகள் மூலமான அரசியல் தீர்விலும் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியாக ஈடுபாட்டுடன் உள்ளனர். நாம் அமைதிப் பேச்சுக்களை கைவிட மாட்டோம். ஜெனிவாவில் ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்மானத்தைச் செயற்படுத்தி பேச்சுகளுக்கான உகந்த சூழ்நிலையை சிறிலங்கா அரசாங்கம் உருவாக்கவேண்டும். இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரது பாது காப்பு தொடர்பாக விவாதிக்கப்பட் டால் ஒஸ்லோ பேச்சுக்களில் விடு தலைப் புலிகள் பங்கேற்பார்கள்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் கண்காணிப்புக் குழுவில் இடம்பெற்றிருந்தாலும் அவர்கள் தங்கள் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்கள் அல்லர். இதுவும் ஒஸ்லோவில் வி[illegible] றார் பாலசிங்கம். (க)

# தமிழர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு சொல்லவும் வைத்திருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சட்டபூர்வமான இலட்சியத்தை நோக்கியதாகவே தமிழர் போராட்டம் இருக்கிறது. ஆனால், அதனை அடையப் புலிகள் கையாளும் ஆயுதப் போராட்ட வழியைத்தான் அமெரிக்கா எதிர்க்கிறது. வெறுக்கிறது. ஏற்புடைய ஜனநாயகப் போராட்ட வழிகள் பல இருக்கும் பொழுது எவராலும் ஏற்க முடியாத ஆயுதம் தூக்கும் வழியைப் புலிகள் கையாளுவதையே அமெரிக்கா வெறுக்கிறது; எதிர்க்கிறது என்றும் ரிச்சர்ட் பௌச்சர், குறிப்பிட்டிருக்கிறார்.

கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றிலும், பின்னர் ஜூன் முதலாம் திகதி நடந்த இலங்கை - அமெரிக்க வர்த்தக 'சேம்பர்ஸ்' கூட்டத்தில் பேசும் போதும், தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கை மீது அமெரிக்காவின் நிலை என்ன என்பதைத் தெட்டத் தெளிவாக பௌச்சர் எடுத்து முன்வைத்திருக்கிறார்.

''பரம்பரை பரம்பரையாகத் தாங்கள் வாழ்ந்து வரும் தாயக மண்ணில் தங்களைத் தாங்களே ஆளும் - தங்களது தலைவிதியைத் தாங்களே நிர்ணயிக்கும் - தங்களது - வாழ்க்கை முறையைத் தாங்களே வகுத்துக் கொள்ளும் விருப்பங்கள் ஒரு இனத்தின் சட்டபூர்வமான அபிலாஷைகளே! இதனை அமெரிக்கா அங்கீகரித்தே வருகிறது.'' - என்றும் அவர் சுட்டிக் காட்டிப் பேசினார்.

### பயங்கரவாதத்தை கைவிடவேண்டும்

''புலிகள் பயங்கரவாதத்தைக் கைவிட வேண்டும். அப்படி அவர்கள் கைவிட்டால், அவர்களுடன் பேசுவதற்குரிய வாய்ப்புகளை அமெரிக்கா, பின்னர் பரிசீலனைக்கு எடுக்க வழிகள் பிறக்கும். பயங்கரவாத்தை முறியடிப்பதற்கு முழு உலகமுமே இன்று ஒன்றுபட்டுத் திரண்டு வருகிறது என்பதை விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் விளங்கிக்கொள்ளவேண்டும். அந்தப் பயங்கரவாதம் ஆப்கானிஸ்தான் மலைகளிலிருந்து வந்தால் என்ன, வன்னியின் வயல் வெளிகளிலிருந்து வந்தால் என்ன அவற்றை முடியடிக்கவே உலகம் திரண்டு ஒன்றுபட்டு நிற்கிறது.

### இலங்கை அரசுக்கும் கடப்பாடு உண்டு

தமது உரையின்போது அமெரிக்கத் துணை ராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் பௌச்சர், இலங்கை அரசு செய்ய வேண்டியவற்றையும் எடுத்துக்கூற மறக்கவில்லை.

சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யக்கூடிய முறையில் இலங்கை அரசும் நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனநாயகத்தை வரித்துக் கொண்ட ஒரு அரசிடமிருந்து நாங்கள் பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறோம். மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும். சிறுபான்மை இன மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். சகலரும் கட்டுப்பாடுகள் இல்லாத தெளிவான ஆட்சி நிலவவேண்டும். சமாதானத்துக்கான தூர நோக்கும் தெட்டத் தெளிவாகத் தெரியவேண்டும். இத்தகைய லட்சணங்களையே நாம் ஜனநாயக அரசுகளிடமிருந்து எதிர்பார்த்து நிற்கிறோம்.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், அது இங்கு வாழுகின்ற சிறுபான்மை இனமக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயிக்கும், தங்கள் வாழ்க்கை முறையைத் தாங்களே தீர்மானிக்கும் தங்களின் அபிலாஷைகளை இந்த அரசு இலங்கை என்ற ஒரே தேசியத்தின் கீழ் செய்து தரும் என்பதை வெளிக்காட்டுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது நேர்மையை அரசு வெளிக்காட்ட வேண்டும்.

அரசின் நேர்மைத் தன்மையை, விசுவாசத்தை வெளிக்காட்டுவதற்கு உதாரணம் ஒன்றையும் பௌச்சர் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்மொழியின் பாவனைக்குள்ள உரிமையை உறுதிப்படுத்தி, அதனை அரச மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புகளில் சம சந்தர்ப்பங்கள் வழங்குவதன் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதே அந்த உதாரணமாகும்.

### அரசு மீது குற்றச்சாட்டு

கடந்த பெப்ரவரியில் ஜெனிவாவில் நடந்த பேச்சின் போது இணங்கப்பட்டபடி, துணை ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு இலங்கை அரசு தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டையும் ரிச்சார்ட் பௌச்சர் தமது உரையின் போது முன்வைத்திருக்கிறார்.

வன்செயல் பெருக்கத்திற்கான பாரிய பொறுப்பை விடுதலைப் புலிகளே சுமக்க வேண்டியிருக்கிறது. யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏறக்குறைய முறிந்துவிழும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதற்கும் புலிகளே ஓரளவுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றும் அமெரிக்க துணை ராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

புலிகளுக்கு எதிராக நாங்கள் இலங்கைக்கு ஆதரவு தருகிறோம். இந்த ஆதரவை, ராஜரீக ரீதியாக, பொருளாதார ரீதியாக, இராணுவ ரீதியாக வழங்குகிறோம். ஆனாலும், மறுபடியும் யுத்தம் மூளுவதை நாங்கள் விரும்பவில்லை. எங்களின் இந்த உதவி, யுத்தத்துக்குப் போவதற்கு ஊக்கம் தருவதற்காக வழங்கப்படவில்லை. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வைக் காண முடியாது என்பது எமக்குத் தெரியும்.

மீண்டும் ஒரு முழு அளவிலான யுத்தம் மூளுமாயிருந்தால் இலங்கையின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும். முதலீடுகள் வராது. உல்லாசப் பயணிகள் வருகை நின்று விடும். கப்பல் சேவைக்கான காப்புறுதிக் கட்டணம் உயரும். அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவேண்டிய நிதி யுத்தத்துக்கு முடக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சாத்தியமானளவு மிக விரைவாக விடுதலைப் புலிகளும், அரசும் பேச்சுக்குப் போக வேண்டும் என்பதே எங்கள் எல்லோரது விருப்பம் என்றும் அவர் கூறத் தவறவில்லை.

# தமிழர் தாயகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ச்செல்வன் வழங்கிய செவ்வி வருமாறு:-

எமது ஒஸ்லோப் பயணமானது தாயகத்தில் இன்று ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமையை சுமுகமான நிலைக்குக் கொண்டு வரும் என்று நாங்கள் நம்பவில்லை.

உண்மையிலேயே நாம் ஒஸ்லோவுக்கு போவது என்பது, நோர்வேயினுடைய அழைப்பை ஏற்று அதனை மதித்து இது வரை காலமாக நோர்வேத் தரப்பு முன்னெடுத்து வந்த அமைதி முயற்சிகள், சமாதான முன்னெடுப்புகள், அனுசரணைப் பணிகளுக்கு மதிப்பளிக்கும் முகமாகத் தான் நோர்வே அழைப்பை எங்களுடைய தலைமைப்பீடம் சாதகமாக பரிசீலித்து ஒஸ்லோ பயணத்துக்கு எங்களை செல்லுமாறு எமது தலைவர் பணித்தார். அந்த வகையில்தான் ஒஸ்லோ செல்கின்றோம்.

தமிழர் தாயகத்தில் மிக மோசமாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற இனப்படு கொலைகள், வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை நாம் நோர்வேத் தரப்புக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெளிவுபடுத்துகின்ற ஒரு முயற்சியாகத்தான் எங்களுடைய பயணம் அமைகின்றது. ஒருபக்கம் சமாதான அழைப்பை விடுத்துக் கொண்டு, சமாதானத்துக்கு சாதகமாக பேசிக்கொண்டு, பேச்சளவில் ஒன்றையும், செயலளவிலும் முழு அளவில் தமிழர் தாயகத்தை சிதைப்பதும், தமிழர் தாயகத்தில் இனப்படுகொலையை கட்டவிழ்த்து விடுவதும் மிகக் கொடூரமான ஒரு யுத்தத்தை எதிர்நோக்கும் நோக்கோடு தான் செயல். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீவிரமாக செயற்பட்டு வருகின்றார். ஆகவே, மஹிந்த ராஜபக்ஷவிற்கு எந்த விதத்திலும் சமாதானத்தின் மீது ஆர்வமோ அக்கறையோ இல்லை.

சர்வதேச சமூகத்தின் அழுத் தங்களை தணிப்பதற்காகவே பேச்சளவில் அவர் இப்படியான பேச்சுகளை பேசிக்கொண்டிருக் [illegible] செயற்பாட்டில் எதுவுமில்லை இதனை அம்பலப்படுத்தும் நோக்கோடுதான் ஒஸ்லோவுக்குப் போகிறோம்.

இலங்கை அரசாங்கத்தின் அழுத்தங்கள் மற்றும் தீவிர முயற்சிகளினால் கட்டவிழ்த்து விட்டிருக்கின்ற பொய்யான பரப்புரைகளால் சரவதேச சமூகம் மேற்கொண்டிருக்கிற செயற்பாடுகளால் எங்கள் மக்கள் கவலை அடைந்தது மட்டுமல்லாமல் ஆத்திரமடைந்தும் உள்ளனர். தாயகத்தில் அனைத்து மக்களும் பூரண எழுச்சியோடு ஒரு குறிக்கோளுடன் அணிதிரண்டுள்ளன. எங்களுடைய தாயகப் பகுதியை இலங்கைப் படைகள் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு எங்களது மக்களை சித்திரவதை செய்துகொண்டு படுகொலை செய்துகொண்டிருக்கும் வரை சமாதான முயற்சிகள் சாத்தியமில்லை என்பதை மக்கள் உணர்ந்திருக்கின்றனர்.

முழு அளவில் எங்கள் தாயகப் பிரதேசத்தை மீட்டெடுத்து நிம்மதியாக - சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்டும் என்பது தான் எங்கள் மக்களின் ஒட்டுமொத்த அபிலாசையாக இருக்கிறது.

எங்களுடைய தாயகத்தில் வன்முறைகளும் படுகொலைகளும் மிக உச்ச அளவில் தீவிரப்படுத்தப்பட்ட நிலையில் எமது தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற வேண்டும் என்ற வெறியோடு மக்கள் உள்ளனர்.

இதனை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. இந்த நிலையில்தான் எங்கள் பயணம் அமைந்திருக்கிறது. எங்களுடைய மக்களின் அபிலாசைகள், எமது தலைவரின் உறுதியான நிலைப்பாடுகளை நேரடியாக எடுத்து விளக்குவது தான் பொருத்தமாக இருக்கும் என்ற வகையில்தான் எங்கள் தலைவர் ஒஸ்லோப் பயணத்துக்கு எங்களை அனுமதிக்க இணங்கினார்.

எங்கள் மக்களினது பூரண உழைப்பு, எழுச்சி மூலமாக எமது தேசத்தின் மீதான ஆக்கிரமிப்புகள் அகன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் காலம் மிக விரைவில் நெருங்கி வருகிறது என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன்.(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# இணைத் தலைமை நாடுகளின் நிலைப்பாட்டை நிராகரித்து நிற்கும் ஜனாதிபதி மஹிந்தர்

கடந்த முதலாம் திகதி - வியாழனன்று - இலங்கையின் தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்களையும், இலத்திரனியல் ஊடகங்களின் தலைவர்களையும் தமது அலரி மாளிகை இல்லத்துக்கு அழைத்து, அவர்களுக்கு காலை விருந்து வழங்கி உபசரித்து, அவர் களுடன் உரையாடினார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அப்போது தமது அரசியல் கொள்கைகள், தாம் கடைப்பிடிக்கப் போகும் கோட்பாடுகள் போன்றவை பற்றியெல்லாம் விரிவாகப் பிரஸ்தாபித்தார் அவர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை கள் எட்டாவது தடவையாகக் கூடி, இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்ந்த பின்னர் டோக்கியோவிலிருந்து கூட்டறிக்கை வெளியிட்டு, சரியாக 48 மணி நேரத்தின் பின்னர் ஜனாதிபதி மஹிந்தரின் இந்தச் சந்திப்பும், அவரின் கொள்ளை விளக்க விரிவுரையும் இடம்பெற்றன.

அப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் இணைத் தலைமையினால் நன்கு - ஊன்றி - கவனிக்கப்பட வேண்டும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தமது அரசையும், தமது தலைமையையும் புதியவை என்று வர் ணித்த ஜனாதிபதி மஹிந்தர், எனவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளை புதிதாக - புதிய ஆரம்பத்திலிருந்து - புதிய உத் வேகத்துடன் - ஆரம்பிப்போம் என்றார்.

முன்னைய அரசு இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியாக எடுத்த நடவடிக்கைகள் தம்மைக் கட்டுப்படுத்தவே மாட்டா என்று அடித்துக் கூறிய ஜனாதிபதி, பழைய இணக்கப்பாடுகள், முடிவுகளைத் துறந்து விட்டு புதிய முயற்சிக்கு வாருங்கள் என்று அழைப்பு விடுத் தார்.

தற்போதைய அமைதி முயற்சிகள் தொடர்பாக 2002 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு இறுதி வரை எடுக்கப்பட்ட முடிவுகள், ஒஸ்லோ இணக்கப்பாடு, அதனை ஒட்டி ஆறு சுற்றுப் பேச்சுகளில் ஏற்பட்ட உடன்பாடுகள் எவற்றையும் தாம் மதிக்கப் போவதில்லை என்பதைத் தெளிவாகவும் அதேநேரம் உறுதியாகவும் இதன் மூலம் வெளிப்படுத்தினார் ஜனாதிபதி.

சரியாக 48 மணி நேரத்துக்கு முன்னர் இலங்கை நிலைவரம் தொடர்பாக இணைத் தலைமை நாடுகள் தெரிவித்த கருத்துக்குப் பதிலடியாகவே - ஜனாதிபதி மஹிந்தரின் பிரதிபலிப்பாகவே - இதனைக் கருத வேண்டும்.

இணைத் தலைமை நாடுகள், தமது பிந்திய அறிக்கையில் இவ்விவகாரம் குறித்து முக்கிய விடயத்தைத் தமது கருத்தாக வலியுறுத்தி இருந்தன.

*"2002 - 2003 காலப் பகுதியில் நடைபெற்ற வெற்றிகரமான சமாதானப் பேச்சுகளின்போது இரு தரப்பினரும் எதிர்காலப் பேச்சுகள் தொடர்பான அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தனர். யுத்த நிறுத்த ஒப்பந்தம், ஆறு சுற்றுப் பேச்சுகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற ஜெனிவாப் பேச்சு ஆகியவற்றில் எட்டப்பட்ட இணக்கங்கள், அடிப்படைக் கொள்கைகள் என்பன தொடர்ந்தும் கடைப்பிடிக்கப் படுவதை இரு தரப்பினரும் மீள உறுதிப் படுத்த வேண்டும்."*

- என்று இணைத் தலைமை நாடுகள் தமது கூட்டறிக்கையில் மிகத் தெளிவாகக் கோரியிருந்தன.

ஆனால், இந்தக் கோரிக்கையைத் தாம் ஏற்கவேயில்லை, அதை நிராகரிக்கின்றார் என்பதையும் -

இதற்கு முன்னர் அமைதி முயற்சிகளில் எட்டப்பட்ட இணக்கங்களைத் தாம் ஏற்றுக் கொள்வது குறித்து மீள உறுதி வழங்குவதற்குப் பதிலாக அந்த இணக்கங்களைத் தாம் புறமொதுக்குகின்றார் என்பதையும் -

இணைத் தலைமை நாடுகளின் அறிக்கையும், அதன் ஊடாக அவற்றின் கோரிக்கையும் வெளியாகி இரண்டு நாட்களுக்குள்ளேயே வெகு அப்பட்டமாக வெளிப்படுத்தி விட்டார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

'கையோடு பதில்' என்ற கணக்கில் - இணைத் தலைமைகளின் முகத்தில் கரி பூசும் விதத்தில் - இலங்கை ஜனாதிபதி அளித்திருக்கும் இந்தப் பதிலடி குறித்து ஐரோப்பிய ஒன்றியமும், இணைத் தலைமைகளும் என்ன பதில் கூறப் போகின்றன?

ஏற்கனவே, இந்த அமைதி முயற்சித் தொடரில் எட்டப்பட்ட இணக்கங்களை - தாய்லாந்தின் சட்டாகிப் நகரப் பேச்சுகளில் தொடங்கி கடந்த பெப்ரவரி ஜெனிவாப் பேச்சுகள் வரை எட்டப்பட்ட முடிவுகளை - நடைமுறைப்படுத்துவதில் தனக்குள்ள பற்றுறுதியை, இணைத் தலைமைகள் எதிர்பார்ப்பது போல வெளிப்படுத்துவதற்குத் தமிழர் தரப்பு இப்போதும் தயார்.

இதுவரை எட்டப்பட்ட இந்த இணக்கங்களை நடைமுறைப்படுத்துவதில் தனக்குள்ள பற்றுறுதியை - திடசங்கற்பத்தை - இணைத் தலைமைகளின் வலியுறுத்தலுக்கு வெறும் பெயரளவிலாவது உடன்படுவதாகக் காட்டுவதற்கேனும், பேச்சளவிலாவது வெளிப்படுத்த மஹிந்தரின் அரசு தயாரா?

இல்லை என்பதுதான் இதற்குப் பதிலாக இருக்கும்.

இதற்கு முந்திய பேச்சுகளில் காணப்பட்ட - சமஷ்டித் தீர்வு தொடர்பான உடன்பாடு, யுத்த நிறுத்த உடன்பாடு, 'சிரான்' உப குழு இணக்கம், இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்துப் பேசுவதற்கான சம்மதம் போன்றவற்றைத் தாம் ஏற்றுக் கொள்வது, தனது கூட்டணியில் இருக்கும் பௌத்த சிங்களப் பேரினவாத மற்றும் தீவிரவாத சக்திகளுக்கு உடன்பாடற்றது என்பதை அறிந்து - உணர்ந்து - இப்படிப் பின்வாங்குகின்றார் ஜனாதிபதி மஹிந்தர்.

பௌத்த, சிங்களத் தீவிரவாதப் போக்குடைய பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக, தமது வலியுறுத்தலை மதிக்காமல் - பொருட்படுத்தாமல் - எதேச்சாதிகாரமாகச் செயற்படும் இலங்கை ஜனாதிபதி மஹிந்தரின் இந்தப் போக்குக் குறித்து இணைத் தலைமை நாடுகள் என்ன செய்யப் போகின்றன? வெறும் கண்டன அறிக்கையோடு அமைதி பேணி, வாய் புதைத்து, பயனற்று அமையப் போகின்றனவா? அல்லது தகுந்த நடவடிக்கை எடுக்கப் போகின்றனவா?

பொறுத்திருந்துதான் பார்ப்போமே....

---

ஏழுசுற்றுப் பேச்சுகளிலும் எட்டப்பட்ட

# வாக்குறுதிகளை நிறைவேற்றும் மனநிலையில் அரசு இல்லை

## ஒஸ்லோ புறப்படமுன் புலித்தேவன் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன்5

ஸ்ரீலங்கா அரசாங்கங்களுடன் ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்களையும் ஜெனீவாவில் ஒரு சுற்றுப் பேச்சையும் நடத்தியும் அப்பேச்சுகளில் ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொண்டவாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. நிறைவேற்றுவதற்கான மனநிலையும் அதற்கு இல்லை. இதனை கடைசியாக சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச்சொல்லவே நாங்கள் ஒஸ்லோவுக்குச் செல்கிறோம் என விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் தீவிரமான அழுத்தத்தைப் பிரயோகித்து தீர்வொன்றை எட்டுவதற்கு நிர்ப்பந்திக்காதவரை எந்தவிதமான ஒரு தீர்வும் இலங்கை இனப்பிரச்சினைக்குக் கிடைக்கப்போவதில்லை என்பதை சர்வதேச சமூககத்திற்கு எடுத்துரைக்கும் முயற்சியாகவே புலிகளின் ஒஸ்லோப் பயணம் அமையவுள்ளது.

தென்னிலங்கையில் காலங்காலமாக குழுக்கள் அமைப்பது, மாநாடுகள் கூட்டுவது போன்ற நிகழ்வுகள் அடிக்கடி நடைபெற்றுள்ளன. ஆனால், அவையெதுவுமே உருப்படியான எந்தவிதமான தீர்வையும் தந்ததில்லை. அதேபோலவே ஸ்ரீ லங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தற்போது அமைக்கப்படும் இரு குழுக்களும் எந்தவிதமான தீர்வையும் தரப்போவதில்லை. அதேவேளை மேற்படி குழுக்களிலும் அவைபற்றிய கூட்டங்களிலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இணைக்கப்படாமை, தென்னிலங்கையும் தமிழீழமும் இரு துரவங்களாகப்பிரிந்துவிட்டனஎன்பதையேதெளிவாகக் காட்டுகின்றன என புலித்தேவன் மேலும் தெரிவித்தார்.

---

# அவசரகால நிலை ஏற்பட்டால் மக்களுக்கு எவ்வாறு பணிபுரிவது?

## சேவை நிறுவனங்கள் அவசர ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன்5

குடாநாட்டில் அவசரகாலநிலைமை ஒன்று ஏற்பட்டால் அதனால் பாதிக்கப்படும் மக்களுக்கு எவ்வாறு பணியாற்றுவது என்பது தொடர்பாக இங்குள்ள உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் கூடி ஆராய்ந்துள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 26 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அதன் தலைவர் எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், குடாநாட்டில் பணியாற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

தற்போது நாட்டில் ஓர் அசாதாரண சூழ்நிலை நிலவிவருகிறது. இந்த நிலையில் குடாநாட்டில் அவசர கால நிலை ஒன்று ஏற்பட்டால் அதன் மூலம் பாதிக்கப்படும் மக்களுக்கு எவ்வாறான உதவிகளை வழங்குவது, அவர்களின் நலன்களைக் கவனிப்பது தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

மக்கள் பாதிக்கப்படும்இடங்களுக்கு உடனடியாகச்சென்று அவர்களை மீட்கும் பணிகள், பாதிக்கப்பட்டமக்களுக்கு நிவாரணப் பணிகள், குடிதண்ணீர், சுகாதார வசதிகளை ஏற்படுத்தல், பாதுகாப்பான இடங்களில் அவர்களைக் குடியமர்த்துதல் போன்ற அவசர பணிகளை மேற்கொள்வதென இந்தக் கலந்துரையாடலில்அரச சார்பற்ற நிறுவனங்கள் முடிவு செய்தன.

இதற்கென பிரதேச செயலர் பிரிவு ரீதியாகச் செயற்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்து பாதிக்கப்படும் மக்களுக்கான அவசர பணிகளை வழங்குவதற்கான குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக தென்மராட்சியில் அறவழிப்போராட்டக்குழு, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சர்வோதயம் ஆகியவை இணைந்து 30 மனிதாபிமானப் பணியாளர்களைத் தெரிவு செய்துள்ளன.

இவர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி சாவகச்சேரி அறவழிப்போராட்டக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

---

# திருகோணமலை அரச அதிபராக சிவில் சேவையாளரை நியமிக்கவும்

## ஜனாதிபதிக்கு மாவை எம்.பி. கடிதம்

கொழும்பு ஜூன்5

திருகோணமலையில் 70 வீதம் தமிழ் ,முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். கடந்த காலங்களில் இந்த மாவட்டத்திற்கு தமிழ் பேசும் அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. இப்பதவி தமிழ் பேசும் சிவில் சேவையாளர் ஒருவரைக் கொண்டு நிரப்பப்பட வேண்டியிருக்கும் நிலையில், ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. இது இம்மாவட்டத்தை மேலும் ராணுவ மயாமாக்கப்படுவதற்கு ஏதுவாகும். ஏற்கனவே ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமையால் மக்கள் இடம் பெயர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு தெரிவித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆட்சேபக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இது விடயாமாக திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவருமான ஆர்.சம்பந்தன் முறையிட்டிருப்பதை சுட்டிக் காட்டியுள்ள மாவை சேனாதிராசா இந்த விடயத்தை உடனடியாக கருத்தில் கொண்டு சிவில் சேவையாளர் ஒருவரை அரச அதிபராக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (ப)

---

# ஆசிரியர் சேவை பதவியுயர்வு விவகாரம்: மாகாண சபையிலிருந்து ஆவணங்கள் வலயத்துக்கு!

அச்சுவேலி,ஜூன்5

ஆசிரியர் சேவை பதவி உயர்வுகளை வலயக்கல்விப் பணிப்பாளர்கள் வழங்குவதற்கு வசதியாக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்த ஆவணங்கள் அனைத்தும் கல்வி வலயங்களுக்குத் திருப்பி மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

முன்னைய நடைமுறையின் பிரகாரம் ஆசிரியர் பதவி உயர்வுகள் வலயம், மாகாணக் கல்வித்திணைக்களம், மாகாணக் கல்வி அமைச்சு ஊடாக மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டன.

புதிய தீர்மானத்தின்பிரகாரம் ஆசிரியர் சேவைத்தரங்கள் 5 பிரிவுகளுக்கும் பதவி உயர்வு வழங்கும் அதிகாரம் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முன்னைய நடைமுறையில் மாகாணக் கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆசிரியர் பதவி உயர்வு தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் வடக்கு-கிழக்கில் உள்ள 24 வலயக் கல்வி அலுவலகங்களுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.தண்டாயுதபாணி கருத்துத் தெரிவிக்கையில்:-

ஆசிரியர் பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கைகள் நிர்வாக நடைமுறைகளினால் நீண்டகாலமாக இழுபறிப்பட்டு வந்தன. புதிய நடைமுறையின் பிரகாரம் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பதவி உயர்வுகளை வழங்கலாம். அதற்கு வசதியாக உரிய ஆவணங்கள் திருப்பியும் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் பதவி உயர்வுகள் வழங்கப்படாமையால் மஹிந்த சிந்தனையின் படி சம்பள அதிகரிப்பு வழங்குவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்கு முன்னர் ஆசிரியர் பதவி உயர்வுப் பணிகளை நிறைவு செய்யுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகக் கூறினார். (11)

---

**நாளை**

வைகாசி - 23
செவ்வாய்க்கிழமை
06.06.2006
திதி : தசமி
முன்னிரவு : 09.43
நட்சத்திரம் : அத்தம்
பின்னிரவு : 12.44
சுபநேரம் :10.22-11.52
ராகுகாலம் : 02.52-04.22

---

**உதயவாக்கு**

உண்மைதான் மனித ஆன்மாவின் குருதியோட்டம்;பொய்மையான சிலர் கைகளின் மீது நிலைத்து நிற்கும் எதையும் தட்டி எழுப்பி விட முடியாது.

-ஜோர்ஜ்லாவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைக்கின்றோம்!

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை - 8

அன்புடையீர்,

மேற்படி நிகழ்வு நாளை (06.06.2006) செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**பேருரை வழங்குபவர்:**

**திரு.ஆ.சபாரெட்ணம் (B.A.Ceylon )** (ஓய்வு பெற்ற ஆசிரியர், பத்திரிகையாளர்)

**விடயம்:**

"ஸ்பானிய- தமிழ் அனுபூதிநெறிப் போக்குகள்: புனித அவிலா திரேசம்மாள் -காரைக்கால் அம்மையார் ஒப்பீடு"

Spanish- Tamil Mystical Trends: A Comparative Study Of St.Theresa Of Avila and Karaikkal Ammaiyar.

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**தனிநாயகம் தமிழ் மன்றம்,**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

*(சி.49539 (39-17-19)*

### பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி விஜயம்

பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி அட்மிரல் சேர் ஜொனாதன் பாண்ட் இலங்கை வந்துள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவை அவர் நேற்றுச் சந்தித்தார்.

அத்துடன் இலங்கைக் கடற்படைத் தளபதி வசந்த கரனன் கொடவைச் சந்தித்தும் அவர் கலந்துரையாடியுள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி

01-06-2006 அன்று கடமையில் ஈடுபட்டிருந்தவேளை அகால மரணமடைந்த இலங்கை மின்சார சபை, பருத்தித் துறை உப பணிமனை ஊழியரும், எமது சங்க உறுப்பினருமாகிய

**அமரர் தேவசகாயம் அன்னராசசிங்கம்**

*(இ.மி.ச., பருத்தித்துறை உப பணிமனை)*

அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரது பிரிவால் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இலங்கை மின்சார சபை வடமாகாணம்,**
**ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்.**

(சி/49536) (26.39.19.17)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 24 - 03 - 1982



ஆண்டவன் அடியில் 29 - 05 - 2004

## செல்வி சுலக்ஷனா சபாபதி

*(பழைய மாணவி, யா/இந்து மகளிர் கல்லூரி, மாணவி, தொழில்நுட்பக் கல்லூரி,N.C.M.)*
*திதி: 05-06-2006 தசமி*

கண்மணியே!
நெடிய ஈராண்டு நேற்றுப் போல
நெஞ்சினை வாட்ட அழுதழுது
அழியாமல் தங்கியது ஆறாத துயரம் - உன்
நினைவதனை மறக்க முடியாமல் நித்தமும்
-தவிக்கின்றோம்
மறுபிறப்பு உண்டென்றால் மறுபடியும் மகவாக வந்தவிடு
காலம் முடியும் வரை கண்ணீர்தான் எங்களிற்கு!

*223, கலைமகள் வீதி,*
*நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.*

*பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

(50865)(26-39-17-19)

# வேலை ஆள் தேவை

யாழ். நகரில் முன்னணி புடைவைவிற்பனைநிலையத்துக்கு முன் அனுபவமுள்ள / அனுபவமற்ற வேலை ஆள்கள் (ஆண்/ பெண்) தேவை.

தொடர்புகளுக்கு: (50873)

**விள. இல. 2879**
**மே/பா. உதயன்**

## நாய்க்குட்டி விற்பனை

45 நாள்கள் நிரம்பிய, பூச்சி நீக்கப்பட்ட நல்லின டொபர்மன் பின்சர் (Doberman pincher) இன ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தாய் நிறம் கறுப்பு உயரம் 2'2", தந்தை நிறம் கறுப்பு உயரம் 2' 5" நல்ல முறையில் பராமரிக்கக் கூடியவர்களுக்கு மட்டும். (Only for dog lovers)


(50876)

தொடர்பு:
19, இந்துமகளிர் ஒழுங்கை (குமாரசுவாமிவீதி சந்தி), கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

காலத்தால் அழியாத காவிய நாயகனின்

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

*தெய்வீகப் பிறவியாய் 05 . 04 . 1969*



*அநியாய அழிப்பில் 22 . 04 . 2006*

## கனகரத்தினம் வில்வராஜா *(பாபு)*

*(காரைநகர் பிரதேசபை வேட்பாளர்)*

அஞ்சா நெஞ்சம் கொண்ட அண்ணாவே நிறேனும்
அஞ்சாமல் சாதனைகள் பல படைத்தாய்
பிறந்த மண்ணையும் மக்களையும் முன்னேற்றத் துடித்தாய்
தேர்தலில் உன்னை முன்னிற்க முடியாத சக்திகள் உன்னுயிரை
அழித்தாலும் உன்கனவு நடந்தே தீருமையா!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேனையா!

முன்னின்று உதவி செய்தும் ஆறுதல் கூறிய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் உன் நினைவுடன்:
இத்தாவில், பளை. கனகரத்தினம் பத்மராஜா *(அப்பு)*

*(சி.49541) (39-17-19)*

யாழ்.வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் *1990* ஐப்பசி முதல் *2000* ஆம் ஆண்டு ஐப்பசிவரை இல.*58*, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் பின் *2001* ஆம் ஆண்டு பங்குனி முதல் லண்டனில் வசித்தவருமான செல்லையா குலவீரசிங்கம் அவர்களின் பிரியபத்தினியுமான **அமரர் மகாலட்சுமி குலவீரசிங்கம்** அவர்களின்

# 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் மகாலட்சுமி குலவீரசிங்கம்

**அன்னை மடியில் 13.11.1944 — ஆண்டவன் அடியில் 22.04.2006**



22.04.2006 சனிக்கிழமை லண்டனில் அமரத்துவம் எய்திய எங்கள் குடும்பத் தலைவி மகாலட்சுமி குலவீரசிங்கம் அவர்களின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் மற்றும் நேரில் அவரின் இல்லத்திற்கு வருகைதந்து துயர்பகிர்ந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற அவரின் தாயின் இல்லத்திற்குச் சென்று அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய வேலணை, நயினாதீவு உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் , தொலைபேசி மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவித்த உலகெங்கும் உள்ள உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரவர்கள் அனைவருக்கும் 26.04.2006 புதன்கிழமை London மயான மண்டபத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் கிரியைகளை சிறப்புற நடத்திய லண்டன் சைவமுன்னேற்ற சங்கத்தின் பிரதம குருக்கள் வைத்தியநாதன் அவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்திய அனைவருக்கும் மேலும் இந் நிகழ்வுக்கு பலவகையிலும் உதவிய உறவினர், நண்பர்கள், அயல்நாட்டவர்கள் அனைவருக்கும், பத்திரிகைகளில், துண்டுப்பிரசுரம் மூலம் அனுதாபம் செலுத்திய அனைவருக்கும் அன்னார் காலமான செய்தியை ஒலிபரப்பிய லண்டன் I.P.C. வானொலி நிறுவனத்திற்கும், பத்திரிகைகளில் பிரசுரித்த உதயன், வீரகேசரி, தினக்குரல் நிறுவனங்களுக்கும் அன்னாரின் நினைவு மலரை அழகுற அச்சிட்ட அச்சகத்தினருக்கும், இந்நிகழ்வில் மலரஞ்சலி செலுத்திய அன்பர்களிற்கும் இலங்கை, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளில் இருந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அன்பு உறவுகளுக்கும், லண்டன் South End கடற்கரையில் 21.05.2006 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அந்தியேட்டி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும், அன்னாரின் இல்லத்தில் 22.05.2006 திங்கட்கிழமை நடைபெற்ற வீட்டுக்கிரியை நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*தகவல்:*
**கணவன்,**
*பிள்ளைகள்:* **மோகன், குலச்செல்வன்,**
[illegible]
மருமக்கள்.

46, Rugby Road, Kingbury,
London, N.W.99 LB
T.P.: 0208 2043636
Fax: 0208 2040516.

*(50866) (39-17-19)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்காவற்றுறையில் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்5

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வீதி தற்போது புனரமைக்கப்பட்டுவருகின்றது.

இந்த வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்துவந்தது.

தற்போது கற்கள் பரவப்பட்டு வீதியை முழுமையாகப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால், இதுவரை காலமும் இந்த வீதியூடாகப் பயணம் செய்தவர்கள் எதிர் நோக்கிவந்த சிரமங்கள் நீக்கப்பட்டுள்ளன.

# நெடுந்தீவு மாவலி துறைமுகத்தில் பயணிகளின் பொதிகள் சோதனை

நெடுந்தீவு,ஜூன்5

நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்காக மாவலிதுறைமுகத்திற்குவரும் பயணிகளது பொருள்கள் துறைமுகப் பகுதியில் வைத்தே படையினரால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

பயணிகளும் பொதிகளும் சோதனையிடப்பட்ட பின்னர் பயணத்தைத் தொடர்வதற்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படுகின்றன.

நெடுந்தீவில் வைத்து பயணிகள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதனால் இதுவரை காலமும் குறிகாட்டுவான் துறைமுகத்தில் இடம்பெற்றுவந்த நெடுந்தீவு மக்கள் மீதான சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

நெடுந்தீவில் வழங்கப்பட்ட பயண அனுமதி அட்டையைக் குறிகாட்டுவான் துறைமுகச் சோதனைச் சாவடியில் சமர்ப்பித்துவிட்டு பயணிகள் தமது பயணத்தைத் தொடர முடியும்.

இதனால் குறிகாட்டுவான் துறைமுகத்தில் சோதனைக்காக நீண்டநேரம் தாமதித்திருக்கும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.

(111)


**Spoken and Grammar**

சகல விதமான ஆங்கில கற்கைநெறிகளும் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (குழு, தனி).

யாருக்காக:O/L, A/L, G.A.Q., வெளி நாடு செல்லவுள்ளோர்.

Courses Conducted by: B.Ruban (B.B.A.)

Contact: 0779785749

(50860) (24-11-17)



உ

# திருமண அழைப்பு

*ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விய வருடம் வைகாசித் திங்கள் 24ஆம் நாள் (07.06.2006) புதன்கிழமை சித்திரை நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபநன்நாளில் காலை 6.31 மணிமுதல் 8.30 மணிவரையுள்ள சந்திரஹோரையுடன் கூடிய மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்,*

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் முன்னாள் ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமாகிய பிரம்மஸ்ரீ நீ.சச்சிதானந்தேஸ்வரக் குருக்களின் பௌத்திரனும்பருத்தித்துறை கோட்டுவாசல் அம்பாள் முன்னாள் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ஐ.இராமலிங்கக் குருக்களின் தௌஹித்திரனும் எமது ஏக புத்திரனுமாகிய

**சிரஞ்சீவி மயூரவசர்மாவுக்கு**



சுன்னாகம் பிரம்மஸ்ரீ ப.சுவாமிநாத சர்மாவின் பௌத்திரியும் சுன்னாகம் மயிலணி பிரம்மஸ்ரீ சி.சர்வேஸ்வரக் குருக்களின் தௌஹித்திரியும் எமது ஜேஷ்ட புத்திரியுமாகிய

**சௌபாக்கியவதி அம்பிகாவை**

*கன்னிகாதான பாணிக்கிரகண திருமாங்கல்ய தாரணம் செய்ய கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையாரின் திருவருளினாலும் மயிலணி முருகப் பெருமானது அனுக்கிரகத்துடனும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்குத் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*சமாவர்த்தனம்: 06-06-2006 அன்று பகல் 10 மணியளவில் நடைபெறும்.*
*வதூவரகிருகப் பிரவேசம்: 07-06-2006 பிற்பகல் 2 மணி.*

**தங்கள் நல்வரவை நாடும்:**

பிரம்மஸ்ரீ ச.சுந்தரராஜேஸ்வர சர்மா
ரேவதி தம்பதிகள்.
வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில்,
கோப்பாய்.
தொ.பே.: 0777448007.

பிரம்மஸ்ரீ சு.பஞ்சாட்சரசர்மா
ஜானகி தம்பதிகள்
கந்தசுவாமி கோயிலடி,
மயிலணி,
சுன்னாகம்.

(இருவீட்டார் அழைப்பு)

(தயவுசெய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(50779) (24-11-17)


# யாழ். மாநகர சபை

## வீதி வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிட்ட வீதி வேலைக்காக யாழ். மாநகர சபையில் பதிவுசெய்துள்ள இக்ராட் பதிவுடன் கூடிய இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் செல்லுபடியாகும் உறுப்புரிமையுடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி:- 09.06.2006 நண்பகல் 12 மணிவரை
கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 12.06.2006 நண்பகல் 12 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி:- 12.06.2006 பிற்பகல் 3 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வீதிப் பெயருடன் 'வீதி செப்பனிடுவதற்கான கேள்வி' என எழுதி மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு, பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் இந்து விடுதியில் செயற்பட்டு வரும் வீதி வேலைப்பகுதியில் அறிந்துகொள்ளமுடியும்.

| இல. | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கூடிய கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்க முடியாத கேள்வி வைப்புப் பணம் வற் வரி உட்பட்ட (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | புதிய செபஸ்தியான் வீதி | M9 | 1500/- | 1000/- |
| 02. | ஈச்சமோட்டை கடற்கரை வீதி | M9 | 4600/- | 1000/- |
| 03. | மணிக்கூண்டு வீதி | M8 | 14900/- | 1000/- |
| 04. | புனித திருக்கன்னியார்மடம் வீதி | M9 | 3125/- | 1000/- |
| 05. | ஆஸ்பத்திரி வீதி | M6 | 12000/- | 1000/- |
| 06. | சேர்.துரைச்சாமி வீதி | M9 | 2200/- | 1000/- |
| 07. | வாளிக்கிணற்றடி வீதி | M9 | 2000/- | 1000/- |
| 08. | புனித அந்தோனியார் வீதி | M9 | 2450/- | 1000/- |
| 09. | சிவன் பண்ணை வீதி | M9 | 4700/- | 1000/- |
| 10. | சுவாமியார் வீதி | M9 | 3800/- | 1000/- |
| 11. | முஸ்லிம் பாடசாலை வீதி | M7 | 2000/- | 1000/- |
| 12. | கன்னாதிட்டி வீதி | M9 | 1750/- | 1000/- |
| 13. | செட்டி வீதி, முதலாம் ஒழுங்கை | M9 | 1750/- | 1000/- |
| 14. | நாவந்துறை, 3ஆம் ஒழுங்கை | M9 | 2250/- | 1000/- |
| 15. | பண்டாரிக்குள வீதி - சங்கிலியன் வீதி இணைப்பு ஒழுங்கை | M9 | 1250/- | 1000/- |

குறிப்பு: 1. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது தாங்களோ அல்லது தங்கள் பிரதிநிதி ஒருவரோ கேள்விச் சபைக்கு சமுகங்கொடுக்க அனுமதிக்கப்படும்.
2. வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து 2 மாதங்களுள் (31.07.2006ஆம் திகதிக்கு முன்னர்) நிறைவுறுத்தி ஒப்படைக்கவேண்டும்.

**சீ.வீ.கந்தையா சிவஞானம்**
மாநகர ஆணையாளர், மாநகர சபை,
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
02.06.2006

(சி.49532) (24-11-17)

## விவரங்களை பதிவுசெய்யுமாறு அறிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்5

நாட்டில் நிலவும் அசாதாரண நிலையையடுத்து யாழ். குடாநாட்டிலிருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ளவர்களைத் தமது விவரங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கேட்டுள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் தாம் தற்காலிகமாக வசித்துவரும் பிரிவுக்கான கிராம அலுவலரிடம் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் - அவர் தெரிவித்தார்.

(405)

# பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று மானிப்பாய் இறை "விளாங்குளியும் கடத்தலாணையும்" என்னும் 30.12.1989 இல் உத்தரவு பெற்ற உலாந்தா A.மாணிக்கவாசகர் தயாரித்த 481 ஆம் இலக்கப்படத்தில் முதலாம் துண்டாகக் காட்டப்பட்டுள்ள நி.பர.இலா. 2 குளி 09 கொண்டதும் வடக்கே றோட்டையும் கிழக்கே துரைஐயா கைம்பெண் இராசம்மாவின் ஆதனத்தையும் மேற்கே மிகுதியாதனத்தையும் தெற்கே கதிர்காம முதலியார் கைம்பெண் இராசம்மாவின் ஆதனத்தையும் எல்லைகளாகக் கொண்ட ஆதனத்தின் முழுச்சீவிய உரித்துக்கும் மானிப்பாய் தற்போது தெஹிவளை வைத்தியா றோட் 40-2/1 இல் வசிக்கும் பொன்னையா சண்முகபாரதியும் பெண் உருத்திரமணியும் ஆகியோரே உரித்துடையவர்களென்றும் அவ்வாதனம் சம்பந்தமாக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுவதுடன் அவ்வாதனத்தை அறுதி வாங்கவோ நன்கொடை பெறவோ அல்லது குத்தகைக்கு எடுக்கவோ அல்லது வேறெந்த முறையிலும் கையாடல் செய்யவோ வேண்டாமென இத்தால் எச்சரிக்கை செய்யப்படுகின்றார்கள்.

*யாழ்ப்பாணம்.*
*2006 ஆம் ஆண்டு*
*மே மாதம் 7 ஆம் திகதி.*

**பொன்னையா சண்முகபாரதியும்**
**பெண் உருத்திரமணியும்**

(சி.49620) (89.17.11)

# மனிதவள மேம்பாட்டுப் பகுதி நிதித்துறை

## கணக்கியற் பயிற்சிநெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண்களிடமிருந்து கணக்கியற் பயிற்சி நெறிக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

*தகைமைகள்:*

*01. கல்வித்தகைமை:* க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் தேர்ச்சியடைந் திருத்தல் வேண்டும்.

*02. அகவை:* 16 தொடக்கம் 21 வரை.

*குறிப்பு: 01. வேண்டுகை முடிவு நாள்:* **10.06.2006**

*02.நேர்காணல் நடைபெறும் நாள்:* **12.06.2006, காலை9 மணி**

*03.நேர்காணல் நடைபெறும் இடம்:* **மனிதவள மேம்பாட்டுப் பகுதி, நாகதம்பிரான் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.**

04. நேர்காணலுக்கு வருகை தருவோர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிகளுடன் வரவேண்டும்.

05. பயிற்சிக்காலத்தில் தங்குமிட வசதி உண்டு.

- மாதந்தோறும் உரூபா ஐயாயிரம் (5000/-) உதவுதொகையாக வழங்கப்படும்.
- உணவு வழங்கப்படும். உதவுதொகையிலிருந்து உணவுச் செலவு கழிக்கப்படும்.

06. வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:
**பொறுப்பாளர்,**
**மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**
**நாகதம்பிரான் வீதி,**
**ஆனந்தபுரம், கிளிநொச்சி.**

07. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணியும் வழங்கப்படும்.

**ஆளுகை, மனிதவள மேம்பாட்டுப்பகுதி, நிதித்துறை.**

(சி.49467)(39-15-14-32)


**YAARL TECH SYS.**
AIMST University-Malaysia
Sir Pon Ramanathan Road,Kaladdy Junction (Near Jaffna University) - 0779 004129

யாழில் வேறெங்கும் கற்பிக்கப்படாத நுணுக்கங்களுடன்

**Advance Diploma in Digital Video Production**

✓Adobe Premier
✓Hollywood & Indian FX's
✓Ulead Video Studio 9.0
✓Pinnacle Studio 9.4
✓Cool 3D Studio
✓Bluff Titler DX 9
✓VCD&DVD Converters
✓VCD & DVD Cutters
Video & Audio Remix உத்திகள்
Video விளம்பரங்கள் உத்திகள்

அநுமதிக்கட்டணம் மட்டுமே அறவிடப்படும்
15 நாட்களில் நீங்களும் ஒரு திறமைசாலி
ஒரு பிரிவில் 5 பேருக்கே அநுமதி
மாணவர்களே பதிவுகளுக்கு முந்துங்கள்
இச்சலுகை யூன் 15 வரை மட்டுமே.



**IIS**

A/L பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் விரைவில் ஆரம்பம்

விபரம் 07.06.2006 உதயனில்

இயக்குநர் IIS
இல. 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2831


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் வேலுப்பிள்ளை தண்டாயுதபாணி**
(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

அன்னையின் மடியில்
26.12.1930

ஆண்டவன் அடியில்
17.05.2005

அன்பாய் அரவணைத்து எமை வளர்த்த அன்புத் தந்தையே!
எமையெல்லாம் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்தீரோ!
ஒரு வருடமென்ன எத்தனை வருடங்களானாலும்
உங்கள் ஊக்கங்களின் உணர்வுகள்
எங்கள் ஞாபகங்களில் கலந்திருக்கும்.

வேம்படி, வல்வெட்டித்துறை. (சி.49480) (34-17-11)

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலம் பாராட்டு



**திரு.ஐயாத்துரை வரதராசா**
*(யாழ்/ மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் பிரதம எழுதுநர்)*

யாழ்.மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் பிரதம எழுதுநராக (முகாமைத்துவ உதவியாளர்) பணி புரிந்த திரு.ஐ.வரதராசா அவர்கள் தமது 57 வயதில் ஓய்வுபெறுகிறார். இவர் தமது சேவைக் காலத்தை மக்கள் போற்றும் வகையில் பணி புரிந்து அவர்களின் நன்மதிப்பை பெற்றவராவார். இவர் ஸ்ரீ கலைமகள் அம்பாள் ஆலய தர்மகர்த்தாவாக இருப்பதுடன் சமூகப் பணிகளையும் ஆற்றி வருகின்றார். இவரை அம்பாளின் அருளாசிகளுடன் நிறைவாக வாழ வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

செ.செல்வநாதன் குடும்பத்தினர்
செல்வா தச்சுத் தொழிலகம்
117, கனகரட்ணம் வீதி, அரியாலை.

தி.சிவானந்தன் குடும்பத்தினர்
நொத்தாரிஸ் வீதி, அரியாலை.

(50858)(28-32-19-14)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## முருகேசு செல்வநாயகம்

திதி: பூர்வபக்க நவமி
05.06.2006

மலர்வு
07-12-1937

உதிர்வு
17-05-2005

மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்றதேனோ?
மீளாத்துயரில் நாம் வாழ்கின்றோம்
ஆண்டொன்று ஆனாலும் மாறவில்லை உம் நினைவு
மீண்டும் மண்ணுலகில் மலர்ந்திடமாட்டீரோ?

*111/13, இராஜசிங்கம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (50697)(32-19-14)

*பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
15 - 03 - 1946



விண்ணில்
17 - 05 - 2005

## அமரர் சிவசம்பு இராசலிங்கம்

அன்பும் பாசமும் ஊட்டி வளர்த்தீர்கள்
ஆண்டு ஒன்று ஆனாலும்
அழியாது உங்கள் நினைவுகள்.
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

*சூராவத்தை,*
*சுன்னாகம்.*

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(50855)(3219-14)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
29 - 10 - 1928



உதிர்வு
17 - 05 - 2005

## அமரர் செல்லர் இராசலிங்கம்

*(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)*
திதி: 05.06.2006 நவமி

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
என்றும் எம் உயர்வுக்காய் உழைத்திட்ட
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*செருக்கப்புலம் ஒழுங்கை,*
*கோண்டாவில்.*

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(50854)(32-19-14)

# தேசிய நிர்மாண அபிவிருத்தி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் II (நீகோட் II)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

**“ஆ.அ.வ.” கடன் இல.2168 - SRI(SF), “ஆ.அ.வ.” நன்கொடை இல.0007 - SRI(SF)**

## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான
# கேள்வி அறிவித்தல் இல.:04

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD II) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (''ஆ.அ.வ.'') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலை களுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாணமாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிட மிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட்பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | JF/NECORD-II/RD/01-Package - I | வேலணையில் அல்லைப்பிட்டி மண்கும்பான் வீதி புனரமைத்தல் - தொகுதி I | M7 (பெருந்தெருக்கள்) | 33,000/- |
| 02. | JF/NECORD-II/RD/01-Package - II | வேலணையில் அல்லைப்பிட்டி மண்கும்பான் வீதி புனரமைத்தல் - தொகுதி II | M7 (பெருந்தெருக்கள்) | 40,000/- |
| 03. | JF/NECORD-II/RD/06-Package - I | சீனியர் ஒழுங்கை உப ஒழுங்கை, பருத்தித்துறை ஒழுங்கை, கைதடி மேற்கு முத்துக்குமார சுவாமி வீதி, நாவலர் மடம் உச்சில் அம்மன் கோயிலடி வீதி ஆகியன புனரமைத்தல் | M7 (பெருந்தெருக்கள்) | 23,500/- |
| 04. | JF/NECORD-II/RD/06-Package - II | புங்குடுதீவு அம்பலவாணர் வீதி, தெல்லிப்பழை மணற்புலம் வீதி, கணேஸ்வரம் குருகுல பாடசாலை வீதி ஆகியன புனரமைத்தல் | M7 (பெருந்தெருக்கள்) | 25,500/- |
| 05. | JF/NECORD-II/RD/06-Package - III | அப்பாச்சிப்பிள்ளை வீதி, அருணாசலம் பாடசாலை வீதி, தெல்லிப்பழை மேற்கு மத்தனை வீதி, இக்கிறனை வீதி ஆகியன புனரமைத்தல் | M7 (பெருந்தெருக்கள்) | 24,800/- |
| 06. | JF/NECORD-II/ED/08/ | நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் 110'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 74,500/- |
| 07. | JF/ NECORD-II/ED/10 | இளவாலை றோ.க.த.க. ஆண்கள் பாடசாலையில் '110'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 77,000/- |
| 08. | JF/ NECORD-II/ED/11 | சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய 130'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 94,000/- |
| 09. | JF/ NECORD-II/ED/12 | கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 70'X25' அளவுடைய இருமாடி கட்டடம் பூரணமாக்கல் | M6 (கட்டடங்கள்) | 23,500/- |
| 10. | JF/ NECORD-II/ED/13 | கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய 110'X25' அளவுடைய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் பூரணமாக்கல் | M6 (கட்டடங்கள்)) | 68,500/- |
| 11. | JF/ NECORD-II/ED/14 | வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் 110'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 75,000/- |
| 12. | JF/ NECORD-II/AG/03 | கமநல சேவை நிலைய மாவட்ட பயிற்சி நிலையம் மீளமைத்தல் | M7 (கட்டடங்கள்) | 88,000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர் களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   I) நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தர மொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (''இக்ராட்'' டுடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல்வேண்டும்.
   III) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலை களில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல்வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.
   IV) ''இக்ராட்'' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   V) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   VI) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல்வேண்டும்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 021-2223625, தொலைநகல்: 021-2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk
6. ஒப்பந்த ஆவணங்கள் ஆனி மாதம் 7ஆம் திகதி முதல் ஆனி மாதம் 21ஆம் திகதி வரை முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 3மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000/- செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் **''தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்''** இற்கு ஆனி மாதம் 28ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு முன்பாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் ஆனிமாதம் 19ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**க.கணேஸ்,**
**தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,**
**அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி/40526)(24-32-19-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் கல்வி ரீதியான அடக்குமுறை: போராடத் தயாராகும் மாணவர் சமூகம்!

**தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நாளை தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதையொட்டி உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் - யாழ். மாவட்டம் விடுத்துள்ள அறிக்கை இது.**

கல்வி என்பது தமிழனின் பரம்பரைச் சொத்து என்கின்ற பாரம்பரியம் என்றும் பேணப்பட்டு வரும் முதுசம் ஆகும். வடக்கு - கிழக்கின் பூர்வீகக் குடிகளான தமிழ் பேசும் மக்கள் தம் வாழ்வியலின் வளர்ச்சித் தன்மையினை கல்வி ரீதியான வளர்ச்சியினையே அன்றிலிருந்து இன்றுவரை கொண்டு வருகின்றனர்.

சிங்களப் பெரும்பான்மை இனத்தோடு ஒப்பிடுகையில் கல்வி ரீதியிலான உயர் ஸ்தானங்களில் இருந்தவர்கள் தமிழர்கள் என்பதை வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கும். இவ்வேளை தமிழ் மக்கள் மீதான அடக்கு முறையும் அதன்பாலே பிரயோகிக்கப்பட்டதென்பதும் வெளிப்படையான உண்மை ஆகும்.

இலங்கையின் இனவிரிசல் என்பது பிரித்தானியர் ஆட்சிக் காலப்பகுதியில் எழுதப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், பின்வந்த சீர்திருத்தங்களும் தீர்வுத்திட்டங்களும் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிசெய்யுமென எதிர்பார்க்கப்பட்டபோதும் எந்தவித பலனும் தராத நிலையில் 1948ஆம் ஆண்டு இலங்கையின் இறையாண்மை இலங்கைப் பிரஜைகளின் கையில் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்தும் தமிழர்கள் மேலும் புறந்தள்ளப்பட்டார்கள்.

தொடர்ந்து வந்த ஆண்டுகளில் தமிழ் இனத்தின்மீது சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஓரளவாவது தமிழர்களது உரிமைகளை உறுதிசெய்யும்படி தமிழ்த் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பலவும் கலவரங்கள் மூலமும் காடைத்தனங்கள் மூலமும் இனவாதிகளால் செயலூக்கமற்றனவாக மாற்றப்பட்டன.

கல்வி ரீதியான அடக்குமுறைகள் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பின் ஆரம்பக்கட்டத்திலிருந்து சிறிதளவு துளி விடத் தொடங்கினாலும் 1960களின் பிற்பாடே தமிழ் மாணவர்களை நேரடியாகப் பாதிக்கத் தொடங்கியது. 1960களுக்கு முன்னர் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதத் தலைவர்களால் நடத்தப்பட்ட பள்ளிகள் அனைத்தும் குறிப்பாக ஆசிரிய நிர்வாகம், பாடசாலை நிர்வாகம், நூல் நிலைய நிர்வாகம் என்பன அரசின் கைகளுக்கு மாறிய நிலையில் அரசியல் செல்வாக்கு பள்ளி நிர்வாகத்தில் அதிகரித்தது. இது தமிழ் மாணவர்களினை ஒடுக்குவதற்கும் கல்வி ரீதியாக அடக்குவதற்கும் பெரிதும் பயன்பட்டது.

அத்தோடு, தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் பாட நூல்கள் சிங்கள, பௌத்த கலாசாரத்தை வலியுறுத்துவதாயும் பௌத்த மதவாதக் கோட்பாடுகளையும் இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களை வெளிப்படுத்தியும் நின்றன. அத்தோடு, சிங்களம்தான் இலங்கையின் தேசிய இனம் என்பதனை வலியுறுத்தியும் நின்றது. உதாரணமாக சொல்லப்போனால் தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாட நூலில் 1948ஆம் ஆண்டு பெறப்பட்ட சுதந்திரம் சிங்களவர்களால் மட்டுமே பெறப்பட்டது. எனவே, சிங்களவர்களால் மட்டுமே அனுபவிக்கப் படவேண்டுமென குறிப்பிடப்பட்டது. அத்தோடு, அரச கரும மொழியாக சிங்களம் மாற்றப்பட்டதும் தமிழர் கல்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

ஒருபுறம் இன ஒடுக்குமுறை வன்முறை ரீதியாகத் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டும் மறுபுறம் இவ்வாறான அரசியல் சதிகள் மூலம் தமிழர்கள் புறந்தள்ளப்பட்டுக் கொண்டும் சென்றார்கள்.

மாணவர்களின் அரசியல் போராட்ட வரலாற்றிலும் கல்வி ரீதியிலான ஒடுக்குமுறையின் வன்மையான தாக்கம் ஏற்பட்டது 1970 இற்கு பிற்பட்ட காலப்பகுதியிலேயே ஆகும். தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கும் வீராவேச எண்ணங்கள், சிங்கள அரசின் அடுக்களைச்சூளையுள் தள்ளப்பட்ட தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் ஆயுதக் கிளர்ச்சி ரீதியிலான எண்ணம் 1970களின் பின்னரேயே எழுந்து வளரத் தொடங்கியது. ஏனெனில்; தமிழர்களின் தன்னிகரற்ற கல்வி ஆற்றலை அடக்கும் முகமாக தமிழ் மக்களின் நீதியிலான உயர்ச்சிகளைத் தடுக்கும் நோக்கோடு 1970 களில் சிறிமாவோ அரசினால் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் முறை தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறையே தமிழ் மாணவர்களைக் கிளர்ந்தெளவைத்தது.

அனைவரும் விளங்கக் கூறுவோமானால் தமிழ் மாணவர்கள் மருத்துவபீடத்திற்குச் செல்ல உயர்தரப் பரீட்சையில் 400 புள்ளிகளுக்கு 250 புள்ளிகள் பெறவேண்டுமெனவும் சிங்கள மாணவர்களுக்கு 220 புள்ளிகள் போதுமானது என்ற முறைமை கொண்டு வரப்பட்டது. இது தமிழ் மாணவர்களைக் கடும் ஆத்திரத்துக்கு உட்படுத்தியது.

அதனால் உதித்த மாணவர்களின் இயக்கங்கள் பாரிய போராட்டங்களையும் ஆயுதக் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்தி எதிர்ப்பினை வெளிக்காட்டத் தொடங்கின. 1971இல் மேற்படி சட்டம் நடைமுறைக்கு வந்தபோது உணர்ச்சி வேகம் கொண்டெழுந்த யாழ். இந்துக் கல்லூரி மாணவன் விடுதலைப் போரின் முதல் மாவீரன் தியாகி பொன். சிவகுமாரன் மற்றும் மாணவர்களும் சேர்ந்து அரசிற்கெதிரான ஆயுதக் கிளர்ச்சிகளை ஆரம்பித்து தாயக மீட்புப் போருக்கு வித்திட்டனர்.

பலமான ஒரு போராட்டத்திற்கு வழிகாட்டிய தியாகி பொன். சிவகுமாரன் அவர்கள் 1977இல் வீரமரணம் அடைந்தார் அவரின் வீரமரணம் தமிழர்களின் மனதில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தி நின்றது. தமிழர்கள் தமது மறுக்கப்பட்ட உரிமைகளை ஆயுதரீதியிலான போரினால் தான் வெற்றி கொள்ளமுடியும் என்கின்ற யதார்த்த ரீதியிலான உண்மையினை உயர்த்திநின்றது.

அதன்பின்னர் எமது தலைவனின் உதயம் உன்னத விடுதலையினைப் பெறுகின்ற உயரிய எண்ணத்தை சுமந்தபடி இளைஞர்களை அணிசேர்த்து விடுதலைப் போரினை ஆயுத அரசியல் வளர்ச்சியோடு வேகமாக நடத்த வழிகோலியது. ஒட்டுமொத்தமாக பார்ப்போமானால் எமது தேசியத் தலைவரால் வழிநடத்தி வீறுகொண்டு எழுந்திருக்கும் விடுதலைப் போராட்டம் மாணவர்களின் அடக்கு முறையில் இருந்தே ஆரம்பமானது எனலாம்.

தமிழர்கள் கல்வி ஒடுக்குமுறை வரலாற்றின் மறக்கமுடியாத சம்பவம் 1981ஆம் ஆண்டும் அரங்கேற்றப்படுகின்றது. தமிழர்களின் கல்விக்கு மகுடமாகத் திகழ்ந்து தமிழர்களின் சின்னமாக விளங்கிய யாழ். நூல் நிலைய எரிப்பானது தமிழர் மனதில் ஆறாத வடுவாக உள்ளது. அன்று காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி, அமைச்சராக இருந்த காமினி திஸாநாயக்காவும், குண்டர்களும் எரியூட்டினர். இதில் பெறுதற்கரிய 98ஆயிரம் நூல்கள் தீயிலேயே சாம்பராக்கப்பட்டன. இதுமாணவர் மனதில் பெரும் தாக்கத்தினை உண்டுபண்ணியது.

அரசின் இந்த தொடர்ச்சியான மாணவர் அடக்கு முறையினால் பெருமளவான மாணவர்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டார்கள். அவர்களின் விடுதலைப் பயணத்தில் எமது தாயகத்தின் பல பாகங்கள் மீட்கப்பட்டு அங்கு மாணவர்களின் சுதந்திரமான கல்வியினை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நிலைநாட்டியுள்ளார்.

ஆனால், தொடர்ந்தும் ஆக்கிரமிப்பாளர்களால் அல்லற்படும் பிரதேசங்களில் மாணவர்கள் கல்விரீதியான பல வடிவங்களில் வடிவமைத்து பேரினவாதிகளால் ஏவிவிடப்படும் அடக்குமுறைகளால் தமிழ் மாணவர்கள் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

பாதுகாப்பு வலயம், பொருளாதாரத்தடைகள் என்றும் மாணவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறை, இன்றும் மாணவர்கள் தாக்கப்படல், கடத்தப்படல், கொலை செய்யப்படுதலென வேகமடைந்து அடக்குமுறையின் இறுதிக்கட்டத்திற்கு வந்துள்ளது.

சிங்கள அரசின் கல்வி அடக்குமுறைக்கெதிராக மாணவர்கள் அண்மையில் ஏற்படுத்திய அகிம்சை ரீதியிலான போராட்டங்கள் அரசினதும், சர்வதேசத்தினதும் கண்ணில் படாமல் இருந்தது வேதனைக்குரியதே. மேலும், மாறாக சிங்கள அரசு இராணுவப் பயங்கரவாதத்தின் மூலம் மாணவர் போராட்டங்களை அடக்க முயற்சிகளை எடுத்துவருகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஜூன் - 6இல் ஒன்றுகூடும் மாணவர் எழுச்சிநாளில் மாணவர்கள் எழுப்பிய கோசங்களை விட இம்முறை ஜூன் 6இல் எழுப்பப்படவேண்டிய கோசம் வித்தியாசமானதாகும்.

எமது சுதந்திரமான கல்விக்கு வழிவிடு என்ற மாணவர்கள், பதாகைகளை ஏந்திபறக்க விட்ட மாணவர்கள் இன்று சுதந்திரத்திற்காகப் போராட வாருங்கள் என்று அழைப்பு விடுக்கின்றார்கள். கண்டனப் பேரணிகளை கால்தேய நடத்தியவர்கள் இன்று களத்துக்கு விரைவோம் என்கின்றார்கள். ஆத்திரம் தாங்காமல் இராணுவம்மீது கற்களை வீசியவர்கள் குண்டு வீசிப்போராடுவோம் வாருங்கள் என்கிறார்கள்.

இந்த பேனாமுனைகளை துப்பாக்கிகளாயும் வெள்ளைச்சீருடைகளை புலிச்சீருடைகளாகவும் புத்தகப்பைகளை குண்டுசுமக்கும் 'கோல்சர்' களாயும் மாற்றம் காணவைத்தது சிங்கள அரசாங்கத்தில் கல்வி ரீதியான அடக்குமுறையே ஆகும்.

பள்ளி நோக்கி வந்த மாணவர்கள் ஆயுதத்தின்பால் நாடிவருவதை இம்முறை ஜூன் 6 எதிர்பார்க்கின்றது. அரச பயங்கரவாதத்திற்கு எதிரான இறுதி யுத்தத்தில் மாணவர்கள் இணைகின்ற எழுச்சியாக எதிர்பார்க்கப்படுகின்றது. கூக்குரலும் அழுகை ஓசையும் காதில் விழாத அரசினை சுடுகுழல் ஏந்தி சுட்டெரிக்கும் நிலையில் எழுந்து வரும் காலம் உதித்திருக்கின்றது. ✱

## சுற்றுச்சூழல் தினப் போட்டிகள்: இன்று கிளிநொச்சியில் பரிசளிப்பு

வட்டக்கச்சி, ஜூன்5

இன்று கொண்டாடப்படவுள்ள உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு, தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையத்தால் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று பி.ப.2.30 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தாயக திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வெற்றிபெற்ற படைப்பாளிகள் இவ்விழாவில் கலந்துகொண்டு தமக்குரிய பரிசில்களைப் பெற்றுச் செல்லுமாறு சூழல் நல்லாட்சி ஆணையம் வேண்டிக்கொள்கின்றது. ஆக்கத்திறன் போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

**பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டிகள்**

**கவிதை**

கோகுலன் - யாழ்.இந்துக் கல்லூரி, ந.குகநாத் - முல்லை.பாரதி வித்தியாலயம், விசுவமடு, பேரம்பலம் மேனுஜா கிளி.சிவநகர் அ.த.க. பாடசாலை, உருத்திரபுரம்.

**கட்டுரை**

ச.துர்க்கா மாங்குளம் ம.வி., கு.கனுஸ்ரிகா ஒட்டுசுட்டான் ம.வி., சானுஜா மதுரநாயகம் கிளிநொச்சி ம.வி.

**கேலிச்சித்திரம்**

ரகுநாதன் மிதுராஜி யாழ்.வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலை, வி.ஜெயகாந்தன் முல்லைத்தீவு மாங்குளம் ம.வி., ராஜ்குமார் சிந்துஜன் முல்லை , பாலிநகர் ம.வி.

**திறந்த போட்டிகள்**

**கவிதை**

மா.மாசிலாமணி, மணிமாடம், முக்கனிச்சோலை, முள்ளியவளை, சு.தேன்மொழி, இரண்டாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, கோ.மணிவண்ணன், விகிதரன் வீதி, வற்றாப்பளை.

**கட்டுரை**

ச.ரோகினி, இல.279, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி, ஜெனிதா சண்முகராசா இல.38, சிவநகர், கிளிநொச்சி, பீரபா கனகசபை, இல.87, கச்சேரி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**கேலிச்சித்திரம்**

செ.ஜெகன், புலிமச்சிநாதிக்குளம், மாங்குளம், இ.சிறிதரன், இல.92, கோட்டைகட்டியகுளம், அக்கராயன், க.ஜெயதீபன், இல.92, கோட்டைகட்டியகுளம், அக்கராயன்.

**புகைப்படம் சேகரித்தல்**

எழிலரசி மரியதாஸ், முதலாம் வருடம், தேசியக் கல்வியியற் கல்லூரி, வவுனியா, ம.நிர்மலரூபன், எழில் புகைப்படக் கலையகம், கிளிநொச்சி, சி.விமலேஸ்வரி, இல.795, கட்சன் வீதி, வட்டக்கச்சி.

போட்டிகளில் பங்குபற்றிய அனைவருக்கும் ஆறுதல் பரிசில்கள் வழங்கப்பட இருப்பதால், பங்குபற்றிய அனைத்து படைப்பாளிகளையும் விழாவில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (405)

## மேஜர் நீதனின் நினைவுத் தூபி திறப்பு விழா

ஒட்டுசுட்டான், ஜூன்5

ஒட்டுசுட்டான் நியாப் திட்ட அலுவலக சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட மாவீரர் மேஜர் நீதனின் நினைவுத்தூபி திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா. வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் சஞ்சீவன், பொதுமுகாமையாளர் தனபால்ராஜ் ஆகியோர் ஏற்ற தமிழீழத் தேசியக் கொடியினை ராதா வான்காப்புப் பொறுப்பாளர் சுகிர்தன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நினைவுத்தூபியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். உருவப் படத்திற்கான ஈகச்சுடரினை ஒட்டுசுட்டான் கோட்டப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்ற மலர்மாலையினை மாவீரரின் சகோதரன் மலர்மாலை அணிவித்தார்.

நினைவுரைகளை இடதுகரை அ.த.க. பாடசாலை முதல்வர் கருணாகரன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முகுந்தன், ஆசிரியை நந்தினி ஆகியோர் நிகழ்த்தினார்கள். கவிதையினை திருமதி சு.மகேஸ்வரி வாசித்தார்.

[illegible] (341)



திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியாவிற்குச் சென்ற அகதிகளில் ஒரு பகுதியினர் படகோட்டிகளால் ஏமாற்றப்பட்டு, மன்னார் இலுப்பைக் கடவைப் பகுதியில் இறக்கிவிடப்பட்டனர். அங்கு தங்கவைக்கப்பட்டிருக்கும் அகதிகளுக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் மருத்துவ வசதிகளை வழங்கும்போது எடுக்கப்பட்டபடம். (படம்: பரந்தன் செய்தியாளர்)

## நீர்வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்த வன்னியில் தீவிர நடவடிக்கைகள்

வட்டக்கச்சி, ஜூன் 5

தமிழீழ சுகாதார சேவையினரால் இந்த மாதம் நீர்வெறுப்புநோய் கட்டுப்பாட்டு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் துணுக்காய், மல்லாவி நகரிலும் சந்தைகள், வைத்தியசாலைகளிலும் மேற்கொள்ளப்பட்டன.

இச் செயற்பாட்டினை துணுக்காய் பிரதேச சபையினர் மேற்கொண்டதுடன், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும், வவுனியா மாவட்ட சுகாதார சேவையினரும் உறுதுணை வழங்கினர்.

இதன் தொடர் நடவடிக்கையாக கட்டாக்காலி நாய் பிடித்தல், வளர்ப்பு நாய்களைப் பதிவுசெய்தல், தடுப்பூசி ஏற்றுதல், கருத்தடை சிகிச்சை செய்தல் என்பனவற்றுடன் பாடசாலை மாணவர்களுக்கும், பொது மக்களுக்குமான நீர்வெறுப்பு நோய் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

மூன்று மாதங்கள் நிரம்பிய டோமன் பிஞ்சர், அல்சேஷன் குறொஸ் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: முகவரி: இல.6, நந்தாவில் ஒழுங்கை, (இராமகிருஸ்ண மிஷன் பாடசாலை பின் ஒழுங்கை) கொக்குவில் கிழக்கு. நேரம் மாலை 5-6.30 மணி வரை. (50654)

சியான் அன்புஜீயின் எண் சோதிட நூல் விற்பனைக்குண்டு. விலை 10/-. சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (50754)

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.67/32, தர்மலிங்கம் அவென்யூ, சீனிவாசகம் றோட், யாழ்ப்பாணம். (50867)

9 குட்டி போடக்கூடிய **Poberman Pincher** பெண் நாய், அல்சேஷன் ஆண் நாய் (கறுப்பு) **Poberman X Pane** குட்டிகள் புதிய நிலையில் உள்ள **OBITREC** உடற்பயிற்சி சாதனம் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. சிவராஜா அவன்யூ, பலாலி வீதி, திருநெல்வேலி.
**T.P.:** 0777491062 (50881)

### Gas Cooker விற்பனைக்கு

ஓர் அடுப்புள்ள **MPI Gas Cooker** ஒன்று உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776660441. (50872)

### கடை வாடகைக்கு

**K.K.S.** வீதி, தாவடியில் சகல வசதிகளுடன் அமைந்த கடை வாடகைக்குண்டு. தொடர்பு: **T.P.:** 222 3092, 0779795673. (50868)

### காணி தேவை

இளம் தென்னங்கன்றுகளுடன் கூடிய அல்லது தென்னைப் பயிர்ச்செய்கைக்கு உகந்த காணி, பகுதிபகுதியாயினும் பரவாயில்லை. 300 ஏக்கர் தேவை. தொடர்பு:**S.R.** குமார், **T.P.:** 0785300484 (சி/49544)

### ஆனந்தி திருமணசேவை

1966இல் பிறந்த, மூல நட்சத்திரம், 8 இல் செவ்வாய், கிரக பாவசங்கியை 77¼, பட்டதாரி ஆசிரியைக்கு அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் வரனைத் தேடுகின்றோம். அஞ்சல் அல்லது நேரடியாகத் தொடர்புகொள்ளவும். தொடர்பு: ஆனந்தி திருமண சேவை (**V.A.** சிவராசா சோதிடர்), 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (50878)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972 இல் பிறந்த, பூரம், 2ஆம் பாதம், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு ஏற்ற மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: **0776048906** (50616)

### தவறிவிட்டது

யோகேந்திரன் அருந்ததி என்பவரது தேசிய அ. அட்டை (817723454**V**) 30.05.2006 அன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யோகேந்திரன் சாந்தரூபி **K.K.S.** வீதி, தாவடி, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். **T.P.:** 021 4591158 (50864)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், 05.06.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, உடுவில் பாம் - ஆலடி உடுவில், நல்லூர் பாம் சென்ரர் இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-48443)

தரமான பகீரா புறொயிலர் குஞ்சுகள் 07.06.2006 மாலை விநியோகிக்கப்படும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - ஸ்ரான்லி றோட், **P.**ரவி - சாவகச்சேரி, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு. **T.P.:** 222 2867, 222 3529 (50632)

### ஒத்துமாறல்

மாகாணப் பாடசாலையில் இருந்து இலங்கையின் எந்த மாவட்டத்திலும் உள்ள ஏதாவதொரு தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற விரும்பும் விஞ்ஞான பாட ஆசிரியர்கள் தொடர்பு கொள்ளவும்.
**T.P.: 0776032301, 0771244290**
(50771) (24-19-14)

## உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி நியமனம்

கொழும்பு,ஜூன்5

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக ஜப்பானியரான நவோகோ இஷி பொறுப்பேற்கவுள்ளார். தற்போது வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றும் பீற்றர் ஹறோல்டின் பதவிக் காலம் நாளையுடன் முடிவடையும் நிலையில் நவோகோ இஷி அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பான் நாட்டின் நிதியமைச்சில் அபிவிருத்தி உதவிகளுக்கான கொள்கை வகுப்பாளராக நவோகோ இஷி பணியாற்றியவராவார்.

### புதிய பிரிவு ஆரம்பம்

- மொபைல் போன் ரிப்பியரிங்
- வீட்டு மின் இணைப்பு

தொடர்பு: **ரதீபன்**
J/133, கிராம சேவகர் அலுவலகம்
ஆனைக்கோட்டைச் சந்தி, ஆனைக்கோட்டை.
**T.P.:** 0779793346, 0776516647
(பதிவுகள் இன்றுமுதல்)
(50885) (24-19-14)

## LONDON ENGLISH COLLEGE

105(71), Arasady Road, Jaffna. T.P.: 021 222 5889
Business computing
Network solution
No.229A, Mitcham Road, London.

**புதிய ஆங்கில வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன**

காலம்: 3 மாதம் ஆரம்பம்: 17.06.2006

**A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கும் ஏனையவர்களுக்குமான ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்......**

**DIPLOMA IN ENGLISH**

- பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**காலம் - 5 மாதம்**
**வெளிநாட்டில் உயர் கல்வியினை மேற்கொள்வதற்கு**

**IELTS**

- சிறந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், வகுப்புகள் மட்டுப்படுத்தப்பட்டவை.

கட்புல, செவிப்புல சாதன பயன்பாடு, பேச்சுப் பயிற்சிக்கு முக்கியம் அளித்தல்.
(சி/49537) (24-19-14)

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை கண்மணி



போயிட்டி, அச்செழுவினைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கண்மணி அவர்கள் 02-06-2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் இராசம்மா, துரைராஜசிங்கம் (பிரான்ஸ்), மல்லிகாதேவி (கனடா), தவராஜசிங்கம் (தாரணி லொறி உரிமையாளர், நீர்வேலி), சற்குணராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி, சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (50886)(24-19-14)

*நீர்வேலி மேற்கு, நீர்வேலி.* தகவல்: **பிள்ளைகள்.**

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

784 சிவப்பு

துலாம்

02-06-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5191550-5205214

வெற்றி இலக்கங்கள் **08 15 35 39**

**ஜக்பொட் பரிசு ரூபா 23,25,400/-வெல்லப்படவில்லை**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 67,48,600/-
தொடர் இல. 4308262 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூன் மாதம் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,02,632 | 10/- | 30,26,320/- |
| 2 இலக்கங்கள் | 27,745 | 20/- | 5,54,900/- |
| 1 இல+லக்கினம் | 27,501 | 30/- | 8,25,030/- |
| 2 இல+லக்கினம் | 2,576 | 100/- | 2,57,600/- |
| 3 இலக்கங்கள் | 755 | 500/- | 3,77,500/- |
| 3 இல+லக்கினம் | 51 | 5,000/- | 2,55,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 23,25,400/- | - |
| மொத்தம் | | | 56,96,350/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,61,269 | | 67,48,600/- |

இந்த செவ்வாய்க்கிழமை
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 30,01,300/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 5192969-5-61 |
| கொழும்பு | 5195206-8-83 |
| மாத்தறை | 5193565-6-34 |
| அம்பாறை | 5195571-3-56 |
| இரத்தினபுரி | [illegible] |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி ...-03



அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த
**ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்**
**வாழும் கலைப் பயிற்சி**
**இலவச அறிமுக உரை**

**இன்று (05.06.2006) திங்கட்கிழமை மாலை 5 மணி**
**கம்பன் கோட்டம்,**
**நல்லூர் பின்வீதி, நல்லூர்.**
(50880) (24.19.14)

பயிற்சிநாள்கள்: 06.06.2006 முதல் 11.06.2006 வரை
பயிற்சி நேரம்: காலை 6 மணிமுதல் 8.30 மணிவரை
அல்லது மாலை 4 மணிமுதல் 6.30 மணிவரை
அன்பில் உணருங்கள்! உங்களை உணருங்கள்!.
**0779059544, 0777157281, 0779749346**

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### நட்ராசா சேகர்



*அன்னை மடியில்*
1961-10-02

*ஆண்டவன் அடியில்*
1996-06-05

*திதி:* **15-06-2006**

"ஐயிரண்டு ஆண்டுகள் சென்றாலும்
அன்பு மழை குறையாது
ஓயாது எம் துயரம்!
ஓயாது கண்ணீர்!
ஓயாது உங்கள் நினைவலைகள்"

ஆத்ம சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்தித்து
நிற்கும்:
**குடும்பத்தினர்.**

(50888) (24.19.14)
*நெல்லியடி, கரவெட்டி.*

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி குமாரசாமி

**(இளைப்பாறிய அதிபர், யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை, ஆனைக்கோட்டை)**

அளவெட்டி, பெருமாக்கடவையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி குமாரசாமி (இளைப்பாறிய அதிபர்) நேற்று (04.06.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் சிரோன்மணி இ.குமாரசாமி **J.P.** (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் அமரர் பரராஜசேகரம், ஞானசேகரம்(அளவெட்டி) ஆகியோரின் சகோதரரும் கௌரி மனோகரி (ஆசிரியை, யா/ மயிலிட்டி றோ.க.த. பாடசாலை), கானகலாதரன் (பிரான்ஸ்), தேவமனோகரி(அளவெட்டி), கமலமனோகரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் கணேசலிங்கம்(முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்), சிவரஞ்சிதம் (பிரான்ஸ்), செந்தில்நாதன் (அளவெட்டி), தனபாலசிங்கம்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பிரதீபா (இலங்கை வங்கி மேற்றரக்கிளை, யாழ்ப்பாணம்), சஞ்சுதன் (பொறியியில் பீடம் முதலாம் வருட மாணவன் - பேராதனைப் பல்கலைக்கழகம்), பிரவீணா (பிரான்ஸ்), பைரவி, சங்கீதா ( லண்டன்), சியாமா, திவ்வியா, சுவேதா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2006)திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (50879) (18-24-19-14)

*'கமல வாசா' ஆனைக்கோட்டை.* தகவல்: **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

### தேவசகாயம் அன்னராஜசிங்கம்

**(இலங்கை மின்சாரசபை ஊழியர்)**



பருத்தித்துறையைச் சேர்ந்த தேவசகாயம் அன்னராஜசிங்கம் அவர்கள் 01-06-2006 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தேவசகாயம் - இக்கினேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் மேரிவசந்தாவின் அன்புக் கணவரும் டிலானி, றெக்னே, றெக்சன், டிவிசா, டிலக்சனா, றொசாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரப்பிரகாசம் - மாசிலாமணி தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னமரியம்மா, அன்னரத்தினம், அன்னபாக்கியம், அன்னமலர், அன்னசெல்வராசா, அன்னநேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசநாயகம், அக்னெஸ்ராணி, ஜெயநேசன், றெஜினா, டெனிஸ் ஞானமணி, மேரி இந்திரா, லில்லி மெற்றலின் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிப் பூசை இடம்பெற்று, பின்னர் அன்னாரின் பூதவுடல் கோரியடி சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மேரி வசந்தா**
**(மனைவி - ஆசிரியை).**
(சி/49541) (24-19-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.தென்மராட்சி - சாவகச்சேரி நகர் - சங்கத்தானை - இத்தியடி

# அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 07.06.2006 புதன்கிழமை**

★ 22 ஆம் நாள் 05.06.2006 திங்கட்கிழமை கிரியா ஆரம்பம்

★ 23 ஆம் நாள் 06.06.2006 செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு

(50870) (18-14-19)

*நிகழ்வு சிறப்பு வாழ்த்துபவர்:*
**ராஜன்**
**ஆபரண மாளிகை**
*✱ பிரதான வீதி, நெல்லியடி.* *✱ சாவகச்சேரி.*

## அழைப்பு

**உலக சுற்றுச்சூழல் தினம் ஜூன் - 05**

**உலர் வலய நிலங்களைப் பாலைவனம் ஆகாமற் பாதுகாப்போம்**

**உலக சுற்றுச்சூழல் தினமும்**
**பரிசளிப்பு விழாவும்**

*இடம்:* திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகம்
பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி

*காலம்:* 05.06.2006 பிற்பகல் 2.30 மணி

*இந்நிகழ்வில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சூழல் நல்லாட்சி ஆணையத்தால் நடத்தப்பட்ட போட்டிகளுக்கு ஆக்கங்களை அனுப்பியவர்களையும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம்,**
**திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகம்,**
**பரவிப்பாஞ்சான்,**
**கிளிநொச்சி.**

(சி/49547) (24-19-14)

## மனோதத்துவ வைத்தியம்

**(GENERAL PSYCHO THERAPY)**
**இப்பொழுது யாழ்ப்பாணத்தில்**

06.06.2006 - 10.06.2006
(4நாள்கள் மட்டும்)

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
✱சக்தி குறைவு ✱ ஞாபக மறதி ✱ பயம் ✱ நடுக்கம் ✱ நித்திரைக்குறைவு ✱ ஆண்மைக்குறைவு ✱ நீரிழிவுநோய்

*என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?*

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மை சக்திக் குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

*குறிப்பு: இறுதிநேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்*

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம் S.M.P.**

A.S.N.சுற்றுலா விடுதி, 392/A, மணிக்கூண்டு வீதி,யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்)
Govt.Regd.No.9492
Hot Line 0777 569205, T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-49530)

## மரண அறிவித்தல்

### கைலாசபிள்ளை பூரணம் *(மண்கும்பான்)*



மண்கும்பான், 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை பூரணம் 04.06.2006 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் வீரகத்தி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசிங்கம், விசாலாட்சி காலஞ்சென்றவர்களான தங்கம்மா, பிள்ளைமுத்து, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசையா, கனகசுந்தரம், கனகலிங்கம், கெங்காதேவி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற கருணாகரன், தயாநிதி, கருணாநிதி (கண்ணன்), கனகநாயகம் (குஞ்சன்) ஆகியோரின் பாசமிகு தாயும் பாலசரஸ்வதி, காலஞ்சென்ற நாகரெத்தினம், புஸ்பராணி, காலஞ்சென்ற தனபாலசிங்கம், சண்முகரெத்தினம், காலஞ்சென்ற நந்தினிதேவி, கலாமதி, இராஜகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியும் தர்சினி, சுதர்சினி (சுவிஸ்), கஜந்தினி, பாலரிஷி, ஐங்கரன், சத்தியதீபன், விஜிதா, இந்துஜா, பிரதீபன், பிரபாஜினி, ஜெகதீபன், பிரியா, கஜீந்தன், மேனகா, விஜயரூபன் (பிரான்ஸ்), ஜெயரூபன், லோகதர்ஷிகா, தனரூபன், சதீஸ்குமார், சத்தியேஸ்வரி, நிஷாந்தினி, சிந்துஜெயன், றேணுகாந்தன், செந்தூரிகா, தேனுஷன், யுவராஜ், கஜனா, சாரங்கன், சாருஜன், துஷாஜினி, விநோதன், றஜிதரன், பவிதரன், கோபிசியானு, சியாமினி, சண்முகதாசன், சிவசங்கரன் (சுவிஸ்), சதீஸ்பாமா, ஸ்ரீரெங்கநாதன் (பிரான்ஸ்), ரவிவர்மன், பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சலக்ஷனா, டிலஷ் சன், கிஷாயினி, ரிசிபன், சியானுகா, தனுசியா, வோசிகன், கிருசன், சௌமியா, சதுர்ஜன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2006) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

17/32, பண்டாரிக்குளம் மேற்கு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 0777310735

(50889) (39-19-14)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

**ராஜா** *யாழ்ப்பாணம்*
பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
**பட்டியல்**
புதிய வெளியீடு
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம் பீட்டர் ஜாக்சனின்
**கிங் - கொங்** *King Kong*
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30

## முக்கிய பொது அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலக 36 கிராம சேவையாளர் பிரிவு சம்பந்தமான உயர் பாதுகாப்பு வலய அடிப்படை மனித உரிமை சம்பந்தமான வழக்கில் (வழ. இல: 646/2003)**

### உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

மேற்படி தீர்ப்பின் பிரகாரம் தெல்லிப்பழைப் பிரதேச செயலக பிரிவிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பின்வரும் 36 கிராம சேவையாளர் பிரிவினுள் நிரந்தரமாக வதிந்த குடும்பங்களை மீள் குடியேற்றம் செய்வது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை கலந்தாலோசித்து அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு உச்ச நீதிமன்றம் கட்டளை இட்டுள்ளது. இக்கட்டளையின் பிரகாரம் மீள்குடியேற்றம் செய்வதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு:-

1. மீள்குடியேற விரும்புபவர்கள் மாவட்ட செயலாளர், பாதுகாப்பு படைகளின் பிரதிநிதிகளுடனுமான நேர்முகம் ஒன்றிற்கு சமுகமளித்து தங்களுடைய அடையாளம், தங்களது காணிக்குரிய உரித்து ஆவணம் மற்றும் ஏனைய தொடர்புடைய விவரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. அவர்கள் ஒன்று சேர்ந்து பிரஜைகள் குழு ஒன்றை அமைத்து, அதன்மூலம் எவ்வித ஆயுத அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதுகாப்புத் தரப்பினருக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தினை அளித்தல்வேண்டும்.
3. மீள்குடியேறும் நபர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத் திற்கமைவாக விவசாய நடவடிக்கைகளில் அல்லது வேறு நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.
4. அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச உலர் உணவுகளைக் கோர இயலாது.

| தொ.இல | கி.பி.இல | கி.பி.பெயர் | தொ.இல | கி.பி.இல | கி.பி.பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | J/221 | இளவாலை வடக்கு | 19 | J/239 | கட்டுவன் மேற்கு |
| 2 | J/222 | இளவாலை வடமேற்கு | 20 | J/240 | தென்மயிலை |
| 3 | J/223 | வித்தகபுரம் | 21 | J/241 | வறுத்தலைவிளான் |
| 4 | J/224 | பன்னாலை | 22 | J/242 | குரும்பசிட்டி |
| 5 | J/225 | கொல்லங்கலட்டி | 23 | J/243 | குரும்பசிட்டி கிழக்கு |
| 6 | J/226 | நகுலேஸ்வரம் | 24 | J/244 | வசாவிளான் கிழக்கு |
| 7 | J/227 | தெல்லிப்பளை கிழக்கு | 25 | J/245 | வசாவிளான் மேற்கு |
| 8 | J/228 | தெல்லிப்பளை | 26 | J/246 | மயிலிட்டி வடக்கு |
| 9 | J/229 | துர்க்காபுரம் | 27 | J/247 | தையிட்டி கிழக்கு |
| 10 | J/230 | தந்தை செல்வாபுரம் | 28 | J/248 | மயிலிட்டித்துறை தெற்கு |
| 11 | J/231 | மாவிட்டபுரம் | 29 | J/249 | தையிட்டி வடக்கு |
| 12 | J/232 | மாவிட்டபுரம் தெற்கு | 30 | J/250 | தையிட்டி தெற்கு |
| 13 | J/233 | காங்கேசன்துறை மேற்கு | 31 | J/251 | மயிலிட்டித்துறை வடக்கு |
| 14 | J/234 | காங்கேசன்துறை மத்தி | 32 | J/252 | பலாலி தெற்கு |
| 15 | J/235 | காங்கேசன்துறை தெற்கு | 33 | J/253 | பலாலி கிழக்கு |
| 16 | J/236 | பளை வீமன்காமம் வடக்கு | 34 | J/254 | பலாலி வடக்கு |
| 17 | J/237 | பளை வீமன்காமம் தெற்கு | 35 | J/255 | பலாலி வடமேற்கு |
| 18 | J/238 | கட்டுவன் | 36 | J/256 | பலாலி மேற்கு |

**மேற்கூறிய நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் குடியேற்றத்திற்கு சம்மதம் தெரிவிக்கும் குடும்பங்கள்,**

✱ யாழ். மாவட்டத்தினுள் வதிபவர்களாயின் இன்றுவரை தகவல்களை தாங்கள் வதியும் பிரதேச செயலர்கள் ஊடாக அறிவிக்காதவர்கள், விவரங்களை நேரடியாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கவும்.

✱ யாழ். மாவட்டத்திற்கு வெளியே வதியும் குடும்பங்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு 23/06/2006இற்கு முன் விவரங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள்.

**அனுப்பிவைக்க வேண்டிய விவரங்கள்:**

1) பிரதம குடியிருப்பாளர் பெயர் :
2) அங்கத்தவர் எண்ணிக்கை :
3) இடம் பெயர்வின்போது குடியிருந்த கிராம சேவையாளர் பிரிவும் விலாசமும் :
4) தற்போதைய வதியும் விலாசம் :

**மேலும் தொடர்புகளுக்கு,**

தெல்லிப்பழை பிரதேச செயலக தொலைபேசி இலக்கம் : 021 222 3952
தொலை நகல் இல: 021 222 3952
மின்னஞ்சல் முகவரி: dsthellipalai@sltnet.lk

**க.கணேஷ்,**
அரச அதிபர்/மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/49548)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மொண்டநிக்ரோ' தனி நாடாகப் பிரகடனம்



சேர்பியக் கூட்டமைப்பில் இருந்து விலகிய மொண்டநிக்ரோ நேற்று தன்னை தனி நாடாகப் பிரகடனம் செய்தது. சுமார் 6 லட்சம் பேர் இந்த நாட்டில் வசித்து வருவது குறிப் பிடத்தக்கது. தனிநாட்டுப் பிரகடனத்தை அடுத்து வானவேடிக்கை மூலம் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர் அந்நாட்டு மக்கள்.



நேற்றுப் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் எடுக்கப்பட்ட மேலும் சில படங்கள் இவை. (படங்கள் புதுக்குடியிருப்புச் செய்தியாளர்.)

# பேச்சைத் தொடர்வதற்குப் புலிகள் முன்வந்தால் வடக்கு - கிழக்கில் அமைதி தானாகவே ஏற்படும்

## பாலித கொஹோன்ன 'உதயனு'க்குத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 05

வன்முறைகளைக் கைவிட்டு பேச்சுகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் முன்வருவார்களாயின் வடக்கு - கிழக்கில் அமைதி நிலைமை தானாகவே உருவாகிவிடுமென்று அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாலித கொஹோன்ன நேற்றுமாலை 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளில் கலந்துகொள்வதற்காக நேற்றிரவுஒஸ்லோ புறப்படும் முன்னர் கருத்து வெளியிட்ட கலாநிதி பாலித கொஹோன்ன, ஒஸ்லோவில் நடைபெறவுள்ள பேச்சுகள் வெற்றியளிக்குமென்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

ஒஸ்லோ பேச்சுகள், தமிழர் தாயகத்தில் இப்போதுள்ள நிலைமைக்கு மாற்றீடாக அமையாதென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருப்பது பற்றி கேட்டபோது கருத்து வெளியிட்ட பாலித கொஹோன்ன, வன்முறைகளை நிறுத்தி அமைதிப் பேச்சுகளை முன்னெடுக்க புலிகள் முன்வந்தால் வடக்கு - கிழக்கில் இயல்புநிலை தானாகவே ஏற்பட்டுவிடுமென்று கூறினார்.

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள பேச்சுகளில் போர்நிறுத்த ஒப்பந்தம் மற்றும் கண்காணிப்புக்குழு தொடர்பில் புதிய யோசனைகள் எவற்றையும் அரசு முன்வைக்குமா என்று கேட்டபோது பதிலளித்த பாலித கொஹோன்ன, அவ்வாறான புதிய யோசனைகள் எவற்றையும் அரசு முன்வைக்காதெனக் கூறினார்.

ஜெனிவாவில் நடைபெறவிருந்த இரண்டாம் கட்டப்பேச்சுகள் ஸ்தம்பிதமான ஒரு நிலையிலிருப்பதால் அமைதிப் பேச்சுகளை நடத்துவது பற்றி புலிகளுடன் பேசுவீர்களா என்று கேட்டபோது, "அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியத்தைப் புலிகளிடம் வலியுறுத்துவோம்" என்றார் கலாநிதி பாலித கொஹோன்ன.

ஒஸ்லோ பேச்சுகளில் கலந்துகொள்வதற்கான அரச குழு நேற்று நளளிரவு அங்கு புறப்பட்டுச்சென்றது. (க)


# 45 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



அமரர்

**சுப்பிரமணியம் வசீகரன் (கண்ணன்)**

**தோற்றம்:12.11.1978 மறைவு:22.04.2006**

இன்று (05.06.2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் 45ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்விலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:

*கரவெட்டி, மேற்கு, கரவெட்டி.* (50892) **குடும்பத்தினர்.**


# மட்டு. சிறையிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவலர்களை அச்சுறுத்தி துப்பாக்கி முனையில் தப்பிச் சென்றனர்.

தப்பிச் சென்ற கைதிகள் குறித்து சிறைச்சாலை அதிகாரிகள் உடனடியாகப் பொலீஸாருக்கு அறிவித்தனர். இதனையடுத்து சிறைச்சாலையை அண்மித்த கோவிந்தன் வீதி, நல்லையா வீதி, மத்தியூஸ் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் பொலீஸாரும், இராணுவத்தினரும் சல்லடைத் தேடுதல்களை நடத்தினர். ஆனால், தப்பியோடியவர் களைக் கைதுசெய்ய முடியாமற் போனது.

ஐந்து சிறைக் கூடங்களில் இருந்த கைதிகளே தப்பிச் சென்றுள்ளனர். கைக்குண்டுகளை வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த இருவரும், வாகனக் கடத்தல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் ஐந்துபேரும், கொலைக் குற்றவாளியொருவருமே இவ்வாறு சென் றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலீஸார் தனி விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அதேபோல் மட்டக்களப்பு சிறைச்சாலை நிர்வாகமும் மற்றுமொரு விசாரணையை நடத்தி வருகிறது. (க)





03.06.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**07 21 23 48 (16)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301111576 இலிருந்து 301126578

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,02,30,600/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,02,30,600/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 30 | 5,000/- | 1,50,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 406 | 1,000/- | 4,06,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,314 | 500/- | 6,57,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,413 | 40/- | 7,76,520/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,348 | 20/- | 3,66,960/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,76,750 | 10/- | 27,67,500/- |
| மொத்தம் | | | 61,23,980/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,16,267 | | 67,23,980/- |

தொடர் இல. 201207020 க்கு மேற்பட்ட ஜாதா நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூன் மாதம் 07 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,09,70,000/-**

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கல் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| திருகோணமலை | 301115846-6-89 |
| மொனராகலை | 301112955-0-13 |
| மாத்தறை | 301114372-4-32 |
| பதுளை | 301116860-3-64 |
| நுவரெலியா | 301116280-3-45 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03



# எமது நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்!!

*2005 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சையில் சாதனை புரிய வைத்த...*

**நல்லூர்...**

## சயன்ஸ் அக்கடமியின்

மதிப்புக்குரிய இயக்குநருக்கும், பெருமைக்குரிய ஆசிரியர்களுக்கும்
எமது நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்
எம்மைப் போல இனிவரும் சந்ததியும் சாதனைகளைப் படைக்க வேண்டுமென்றும் உளமார வாழ்த்துகின்றோம்.
"சயன்ஸ் அக்கடமியில் இணைந்தவர்கள் என்றும் சாதனையாளர்களே"
நன்றியுடைய 2005 O/L மாணவர்கள் (50891)

**நல்லூர் சயன்ஸ் அக்கடமி**


# பெருமாள் கோயிலடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளரை ஆதாரம் காட்டி செய்திகள் வெளியாகின.

கிரனேட் தாக்குதலை அடுத்து அப்பகுதியூடாகப் பயணித்த பொதுமக்கள் பலரும் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகினர் எனவும்-

வீதியால் வந்த இளைஞர்கள் பலரைத் தடுத்துவைத்த படையினர் அவர்களை நீண்ட நேரம் விசாரணைக்கு உட்படுத்தினர் எனவும் - தெரியவந்தது. (12)

# யாழ். பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முகமாலை முன்னரங்க நிலைகளுக்குச் சென்ற மாணவர்கள் முன்னரங்க நிலைத் தளபதிகள் போராளிகளைச் சந்தித்ததுடன் தாம் கொண்டு சென்ற உணவுப் பொருள்களையும் அவர்களுக்கு வழங்கினர். (12)

# இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் மீண்டுமொரு போர் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாகக் கூறி நாள்தோறும் பெருமளவிலான அகதிகள் தமிழ்நாட்டிற்கு படையெடுத்து வருகின்றனர். மறுபுறம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிடுமாறு பல்வேறு தரப்புகளிடமிருந்து தமிழக முதல்வருக்கு கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில், தமிழக முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர் இன்று முதன் முறையாக இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் முதலமைச்சர் கருணாநிதி, இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் இது தொடர்பான இந்தியாவின் பங்களிப்பு குறித்தும் பேசவுள்ளார்.

சமீபத்தில் தமிழக சட்டசபையில் உரையாற்றியிருந்த விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவர் திருமாவளவன், இலங்கைப் பிரச்சினையில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க)


இன்று ஆரம்பம்

**Fast Track @ AIMS**

பத்திரிகைகளில் பக்கவடிவமைப்பாளர் மற்றும் விளம்பர வடிவமைப்பாளராக வர நீங்கள் தயாரா?

**Graphic Designing & Publishing**

- PageMaker, PhotoShop, CorelDraw
- Designing & Publishing Techniques

Duration 20 Days

பிரபல நிறுவனமொன்றில் வேலைவாய்ப்பு மற்றும்
மேலதிக பயிற்சி வழங்கப்படும்

AIMS

மேலதிக விபரங்களுக்கு
Drictor,
# 118, Palaly Rd.


# மரண அறிவித்தல்கள்


## கணபதி முத்துக்குமாரு (வேலணை)

வேலணை கிழக்கைச் சேர்ந்த கணபதி முத்துக்குமாரு அவர்கள் சனிக்கிழமை (03.06.2006) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் நாகரெத்தினம் (மல்லாவி), மரகதம், வீரசிங்கம் (கொழும்பு), யோகராணி (ராணி), விசயலெட்சுமி (கொழும்பு), பரமலிங்கம் (மன்னார்), யோகநாதன் (நாதன் - வவுனியா), குணசிங்கம் (கொழும்பு) ஆகியாரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சபாரெத்தினம், மகாலிங்கம், பொன்.பாலச்சந்திரன் (கொழும்பு), லீலாவதி, மங்களம், உதயராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2006) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*வேலணை கிழக்கு, வேலணை- 04.* **பொன்.பாலச்சந்திரன்** (மருமகன்), **ம.குகதாஸ்** (பேரன்). (50884)

## செல்லப்பா ஜயந்தன்

கனடா, எம் 1 ஜே 1 ஜே 3, ஒன்றாறியோ, ஸ்காபரோ, மக்கோவன் வீதி 705 - 370ஆம் இலக்கத்தில் வசித்தவரும், கனடா வருமானவரி இலாகாவில் வரிக் கணக்காய்வாளராகக் கடமையாற்றியவருமான ஜயந்தன் 28.05.2006 அன்று கனடா, ரொறன்ரோவில் காலமாகிவிட்டார்.

அன்னார்முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர் (திருகோணமலை) குமுதினியின் கணவரும் காலஞ்சென்றவர்களான அப்புக்காத்து செல்லப்பா, ருக்மணி ஆகியோரின் மகனும் காலஞ்சென்ற V.C.மாசிலாமணி, பத்மாலோசினியின் மருமகனும் வைத்திய கலாநிதி பாக்கியலட்சுமி, சின்னையா, திருமதி கமலநாயகி பிரணவநாதன், மத்மநாதன் ஆகியோரின் பெறாமகனும், சிறீகாந்தன் (ஒற்றாவா), கௌரி (சென்னை), ஹைமா (பேர்ஜன்), திரு ஆருரன் (பிரித்தானியா), அரவிந்தன் (அட்லெயிட்) ஆகியோரின் சகோதரனும் சகுந்தலா, வைத்தியக் கலாநிதிகள் சேது, கனகசபாபதி மற்றும் உமாநீலவேணி, மாயத்திரி, ஹிமாராணி காலஞ்சென்ற ரகுநாதநாத் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ரொறன்ரோவில் ஒக்டென் அந்திமசாலையில் இன்று (05.06.2006) திங்கட்கிழ்மை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(50884) **ஹிமா மாசிலாமணி.**

## சின்னத்தம்பி இராசமணி (கோண்டாவில்)



கோண்டாவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி - இராசமணி அவர்கள் (03.06.2006) அன்று இரவு 10.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோதி, சிவகுமார், ஆனந்தராசா, செல்வராசா, தயாளந்தன், நாயேஸ்வரி (தேவி), யோகேஸ்வரி, ராசன், யோகராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிஷன் பாடசாலை வீதி, கோண்டாவில்.* (50882) தகவல்: **மகன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.